# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 27 வியாழக்கிழமை (11-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:46




தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோரின் 27 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்றுக்காலை முற்றவெளியில் உள்ள நினைவுத் தூபியில் இடம் பெற்றது. யாழ்.மாநகர சபை தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் செ. கந்தையன், வல்வெட்டித் துறை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்துவதை படங்களில் காணலாம்.

*(படங்கள் கொனிக்கா கலர் லாப்)*

## எழுச்சி நிகழ்வுகளுக்கு மதகுருமாரும் ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜன.11

தமிழ் மக்களின் அபிலாஷை சுய நிர்ணய உரிமை ஒன்றே என்ற உண்மையை குடாநாட்டில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் நடைபெறும் மத வழிபாடுகளைத் தொடர்ந்து அனைவருக்கும் விளக்குவதற்கு மதகுருமார்கள் முடிவெடுத்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக சமூகத்திற்கும் - அரசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றிய மதகுருமார்கள் இதனைத் தெரிவித்தனர்.

தமிழ் மக்கள் தமது அபிலாஷைகளை சுயமாக உணர்ந்து வெளி உலகிற்கு வெளிப்படுத்தும் முயற்சியில் அவர்களை ஒன்று திரட்டும் பணிக்கு, அனைத்துத் தரப்பினரும் தமது முழுமையான பங்களிப்பையும

(12ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனைச் சந்திக்க மீண்டும் சொல்ஹெய்ம் வன்னி செல்வார்!

## கொழும்பில் தலைவர்களுடன் விரிவாகப் பேச்சு நடத்தியபின்

கொழும்பு,ஜனவரி11

**நேற்று அதிகாலை கொழும்பு வந்து சேர்ந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட பல அரசியல் தலைவர்களையும் சந்தித்த பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திப்பதற்காக வன்னிக்குச் செல்லவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.**

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமரச ஏற்பாட்டாளராகச் செயற்பட முன்வந்திருக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியாவுக்குச் சென்ற பின்னர், சிங்கப்பூரில் ஓரிரு நாள்களை விடுமுறையில் கழித்து விட்டு நேற்று அதிகாலை 12.10 மணியளவில் கொழும்பு வந்து சேர்ந்தார். கொழும்பில் இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபால கிருஷ்ண காந்தி, அமைச்சர் ஹக்கீம் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



தென்மராட்சியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றியதாகக் கூறப்படும் ஆயுதங்கள் நேற்று மாலை பலாலி இராணுவத் தளத்தில் செய்தியாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். காட்சிக்கு வைக்கப்பட்ட ஆயுதங்களில் 30 எம்.எம். தானியங்கி கிரனேட் செலுத்தியும் ஒன்று. அதனையும் அதற்குப் பயன்படுத்தப்படும் வெடிகுண்டுகளையும் மற்றும் சில ஆயுதங்களையும் மேலே படத்தில் காணலாம். *(மேலும் படங்கள் 11ஆம் பக்கத்தில்)*

# பல்கலைக்கழக எழுச்சி நிகழ்வுக்கு இராணுவத்தரப்பு அனுமதி வழங்காது!

## பலாலியில் பத்திரிகையாளர்களிடம் வடபகுதி படைத்தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் அடுத்த வாரம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு இராணுவத் தரப்பு அனுமதி வழங்காது என்று வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா அறிவித்திருக்கிறார்.



நேற்று பலாலியில் செய்தியாளர் மாநாட்டில் பி.பி.சி. ஆங்கில சேவையின் செய்தியாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து விமானத்தில் அழைத்துவரப்பட்ட செய்தியாளர்கள் மற்றும் யாழ்.பத்திரிகைச் செய்தியாளர்களை நேற்று மாலை பலாலி இராணுவத் தளத்தில் அவர் சந்தித்து உரையாடினார்.

கடந்த செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரிவிகிரண, கினிகிரண இராணுவ நடவடிக்கைகள் குறித்து அவர் செய்தியாளர்க

(11 ஆம் பக்கம் பார்க்க)

### 14 படையினருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

மிருசுவில் படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 14 படையினரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறையில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் அவர்கள் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சமயமே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் (உ-3-31-109-117-173)

## சிப்பாயின் சடலம் மீட்பு; மற்றைய சிப்பாய் கைது

தென்மராட்சி,ஜன.11

மிருசுவில் ஓட்டுவெளி வாய்க்கால் வெள்ளத்திலிருந்து சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள மற்றொரு சிப்பாயை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் உத்தரவிட்டுள்ளார்.

நொச்சியகமவைச் சேர்ந்த ஜே. ஆர்.கே.கருணாரட்ண என்ற சிப்பாயின் சடலமே ஓட்டுவெளி வாய்க்கால் வெள்ளத்தில் இருந்து மீட்கப்பட்டிருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்கா முடித்த' சேவை சனியன்றே இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஜன.11

இன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த 'லங்கா முடித்த' கப்பல் மூலமான பயணிகள் சேவை நாளை மறுதினம் சனிக்கிழமையே இடம்பெறவிருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்தச் சேவையில் பயணம் செய்வதற்காக வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையின் யாழ்.அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கான பயணச்சீட்டுக்கள் இன்று பிற்பகலில் வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவையின் பின்னர் மேலும் இரு தடவைகள் இந்தக்கப்பலைப் பயணிகள் சேவையில் ஈடுபடுத்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-3)

## சந்திரிகா இம்மாதம் இந்தியா செல்வார்?

கொழும்பு,ஜன.11

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அமைச்சர்கள் அடங்கிய உயர்மட்டக் குழு இம்மாதம் இந்தியா சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயை சந்தித்துப் பேச உத்தேசித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த நவம்பர் 4 ஆம் திகதி இது விடயம் தொடர்பாக இந்தியப் பிரதமரும், இலங்கை ஜனாதிபதியும் தொலைபேசியில் உரையாடியதாகவும் -

இது குறித்து மேலும் கலந்தாலோ

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

இன்று (11.01.2001) வியாழக்கிழமை
காலை 8.50 -10.15 மணி வரையுள்ள
சுபநேரத்தில் நடைபெறும்

## செல்வி சண்முகம் சயந்தினியின்

பூப்புனித நீராட்டு விழா வைபவத்தில்
கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

திரு திருமதி.சண்முகம்.
அண்ணன்மார்:- ச.சங்கர், ச.சசிக்குமார். } ஆட்டோ சாரதி

இல.5,சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(82813)

# விடுதிச் சாலை அனுமதி

எமது கல்லூரி விடுதிச் சாலை 15.01.2001 இலிருந்து மீண்டும் இயங்கவுள்ளது. அனுமதி பெற விரும்புவோர் 12.01.2001 வெள்ளிக்கிழமை வருகை தந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே அனுமதி பெற்றவர்களும் அனுமதியை உறுதி செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அதிபர்,
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.
(82818)

# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## வேலுப்பிள்ளை தம்பிஐயா

(கந்தர்மடம், புகையிலை, சுருட்டு வர்த்தகர்)

மலர்வு 04.03.1914 — உதிர்வு 22.12.2000

சொந்தத் தகப்பன் போல் ஆதரித்த சகோதரிகளுக்கும் 22.12.2000 அன்று நடைபெற்ற இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், துக்கம் விசாரித்தவர்களுக்கும் எல்லாவகையிலும் இன்று வரை உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எனது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று (11.01.2001) வியாழக்கிழமை கந்தர்மடம் (வேதாந்த மடத்தில்) ஸ்ரீ சிவகுருநாதபீடம் ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமத்தில் நிகழும் நினைவஞ்சலி, பிரார்த்தனை, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

14,கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில்.
(82819)
பொன்னம்பலம்.
(மகன்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 1944 - 10 - 24



விண்ணில் 2000 - 12 - 12

## திருமதி பொன்னுத்துரை திருவருட்செல்வி

தாயென்ற ஒரு தெய்வம்
இத்தரணியிலே வந்துதித்த ஒரு
தெய்வம் அம்மா! தாய் பாசமோ
ஏனைய அன்புக்கு நிகர் ஏதும் இல்லை!

எங்களையெல்லாம் பரிதவிக்கவிட்டு விண்ணுலகம் சென்ற அன்பு ஆசை அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூஷணித் தாயின் பாதார விந்தங்களைப் பணிகின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முருகன் கோயிலடி,
2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(82812)
கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 244 தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,ஜன.11

காங்கேசன்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 244 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய43 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை 'லங்கா முடித்த' கப்பலில் 436 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டு தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்றும்-

திருகோணமலையில் தேங்கிக் கிடந்த 680 தபாற்பொதிகளும் தற்போது எடுத்துவரப்பட்டு விட்டன என்றும் -

தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## 'கள்ள'க் கரண்ட்: ரூபா 5,000 அபராதம்

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றதாகக் கைது செய்யப்பட்டிருந்த ஐவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி இராசகிராமத்தில் கடந்த 8 ஆம் திகதி நெல்லியடிப் பொலீஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற ஐவர் சிக்கினர்.

இந்த ஐவரும் நேற்று பருத்தித்துறை நீதிவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம்,ஐவருக்கும் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான்.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்) (உ-3-109)

## மற்றுமொருவருக்கு டெங்குக் காய்ச்சல்

யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மற்றுமொருவர் இனங்காணப்பட்டுள்ளார்.அவர் ஒரு டாக்டராவார்.

டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறியுடன் 18 பேர் யாழ்.ஆஸ்பத்திரியில் இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் இரத்த மாதிரிகள் டெங்குப் பரிசோதனைகளுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

இவர்களில் ஒருவர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே உறுதிசெய்யப்பட்டிருந்தது.

மற்றுமொருவரும் இதே காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாக நேற்று யாழ்.ஆஸ்பத்திரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.அந்த நோயாளி ஒரு டாக்டர் எனக் கூறப்பட்டது.

ஏனைய 16 பேரின் பரிசோதனை அறிக்கைகள் கொழும்பில் இருந்து இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)


லஷ்சுமி இணுவில்
இறுதி நாளாக
அஜித், சிம்ரன்
வாலி
(ரீஸ்) காட்சிகள் 10.30, 2.30 (ப.நே.)
(82821)

நாகம்ஸ் சுன்னாகம்
டைட்டானிக்
(தமிழ் - ரீஸ்)
இது ஓர் உண்மைச் சம்பவம்.
காட்சிகள் (82822)
புதிய நேரம்: 10.30, பி.ப. 2.30.

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், சிம்ரன்,
லைலா, ரகுவரன்,
வையாபுரி
நடிப்பில்
பார்த்தேன்
ரசித்தேன்
காட்சிகள்: 10.30, 2.00 (பி.நே.)
(C/14702)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்
பொன்னுத்துரை ஸ்ரீபாலன்
அவர்களின் அன்புத் தாயார்

## பொன்னுத்துரை திருவருட்செல்வி

12.12.2000 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூஷணி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்,
காரைநகர்.
(82817)
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் ஆதன வரி - 2001

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் (252 ஆம் அத்தியாயமான) மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அதற்கு உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பில் பின்வருமாறு முடிவு செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

01) அடுத்துத் திருத்தியபடியான முன்கூறிய கட்டளைச்சட்டத்தின் 238 ஆம் பிரிவின் நியதிப்படி 2000 ஆம் ஆண்டுக்கான பெறுமான மதிப்பீட்டை அல்லது சோலைவரி மதிப்பீட்டை குறிப்பிட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக்கூடியதான அத்தகைய திருத்தங்களுடன் 2001 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடாக அல்லது சோலைவரி மதிப்பீடாக ஏற்றுக் கொள்ள.

02) அடுத்துத் திருத்தியபடியான முன் கூறிய கட்டளைச்சட்டத்தின் 230 ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற பரிபாலன எல்லைக்குட்படும் சகல வீடுகளும் ஒவ்வொரு விவரத்தைக் கொண்ட கட்டிடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2001 ஆம் வருடத்திற்கு பின்வரும் விகிதங்களை உண்டு பண்ணவும், விதிக்கவும்.

அ) 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம், 22ஆம், 23ஆம் வட்டாரங்களில் 12 வீதத்துக்கான (பன்னிரண்டு வீதம்) ஒரு விகிதம்.

ஆ) 19ஆம், 20ஆம், 21ஆம், வட்டாரங்களில் 18 வீதத்திற்கான (பதினெட்டு வீதம்) ஒரு விகிதம்.

03) அ) மேற்குறிப்பிட்ட விகித வரிப்பணங்கள் யாவும் நான்கு சமகந்தாயத் தவணைகளில் 2001 ஆம் ஆண்டு முறையே மார்ச்31, யூன்30, செப்டெம்பர்30, டிசெம்பர்31 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல்வேண்டும்.

ஆ) 2001 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால், ஒரு 10% (பத்து வீதம்) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்துக்குரிய முதல் மாதத்துக்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% (ஐந்து வீதம்) கழிவும் அனுமதிக்கப்படும்.

04) மேற்குறிப்பிட்ட பந்தி 3(அ) இன் படி சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து வீதம்) வீதத்திலும் மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% (இருபது வீதம்) வீதத்திலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

மாநகரசபை அலுவலகம்
யாழ்ப்பாணம்.
2001.01.10
(C/14761)
வே.பொ.பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி கிறிசோஸ்ரம் எலிசபெத்

கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறிஸ்சோஸ்ரம் எலிசபெத் நேற்று (10-01-2001)புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிசோஸ்ரம் பொன்ராசா அவர்களின் அன்பு மனைவியும், அந்தோனிப்பிள்ளை(கொழும்பு) காலஞ்சென்ற துரைசிங்கம் S.M.அல்பிரட், சாமிநாதர்(கொழும்பு)ஆகியோரின் சகோதரியும் யூலியற், கிளிநெற், யோசவ் அன்ரன் (நியூ சிற்றி ரேடர்ஸ், கஸ்தூரியார் வீதி) பிலிப் ஜெயராஜ்(தர்சினி களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி) அலிஸ்ரன் தேவராஜ் (ஜேர்மனி) இம்மானுவல் அருள்ராஜ்(ஜேர்மனி), ஆன் திருநெற் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிறில் பெனடிக்ற் (லைடன் புடைவை நிலையம்), கிளறன்ஸ் ராஜேந்திரன்(படவரைஞர், கொழும்பு), ஆன் கிறேஸ்தரளம், மேரி அசம்ரா றதி, விஜி(ஜேர்மனி), எல்சி(ஜேர்மனி), பவுஸ்ரின்(லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெயக்குமார் (ஆஸ்திரேலியா), பெயந்தினி(லண்டன்),பெயந்திரன்(லண்டன்), பெய றூபினி (கொழும்பு), லூசிலா ஜெயவதனி, கிறிசாந்தன், றொசாந்தன், (புனித பத்திரிசியார் கல்லூரி), ஜீவித்தா, யொவித்தா(திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாணம்) யுலிற்றா, வசந்தன் (புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), சாந்தன் (பரியோவான் கல்லூரி), பிரியதர்சினி(புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(11-01-2001) வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு (புதியநேரம்) புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆராதனையின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27,சுவாட்ஸ் லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(C/14750)
தகவல்:
சிறில் பெனடிக்ற்
(மருமகன்)

# உதயன்

## செவி சாய்க்குக!

அரசாங்கத்துக்கு ஆதரவளிக்காத தமிழ்க் கட்சிகள் இப்போது வரவேற்கத்தக்க முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. தமக்கிடையே உள்ள அரசியல் பகைமையை புறந்தள்ளிவிட்டு, கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைக் கூட்டாகச் சந்தித்துப் பேசி வருகிறார்கள்.

இப்போதைய அவசரத் தேவையாக உள்ள அரசதரப்பின் போர் நிறுத்தத்தை வெளிநாடுகளின் ராஜதந்திரிகளிடம் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தத்துக்குப் பதிலாக அரசாங்கமும் போர் நிறுத்தம் செய்யத் தூண்டும் விதத்தில் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வெளிநாட்டுத் தூதுவர்களிடம் கேட்டு வருகிறார்கள்.

அரசாங்கம் வெளிநாடுகளில் செய்த பிரசாரங்களில் எல்லாம் தாம் ஏற்கனவே தயாரித்துள்ள தீர்வுப் பொதியை—அதிகாரப் பரவல் திட்டத்தை — தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஆதரித்தார்கள்; ஏற்றுக் கொண்டார்கள் என்றவாறே தெரிவித்து வந்தது.

தமிழ் மக்களின் பிரச்சினை வேறு; தமிழீழப் புலிகளின் பயங்கரவாதம் வேறு. விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமலேயே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும். விடுதலைப்புலிகளைத் தவிர்த்து அரசு கொண்டு வரும் ''நியாயமான'' தீர்வை ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ள தமிழ்க் கட்சிகள் ஆதரிக்கும் என்ற படத்தையே வெளிநாடுகளுக்குக் காட்டி வந்தது.

அவ்வாறில்லை. விடுதலைப் புலிகளின் பங்களிப்பில்லாத தீர்வை ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் ஆதரிக்கமாட்டா என்ற உண்மையை அக்கட்சிகள் இப்போது வெளிநாடுகளுக்கு — கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் தூதுவர்களுக்கு—புகட்டி வருகின்றன.

அது ஒரு புறமிருக்க —

சமாதானப் பேச்சுக்களில் அக்கறை கொண்டிருப்பதாக சர்வதேச உலகத்துக்குக் காட்டிக் கொண்டு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உதவுமாறு நோர்வேயிடம் கேட்டு, அந்நாடு தன் முயற்சிகளை ஆரம்பித்த பின்னரும் —

போரைத் தொடர்ந்து கொண்டே பேச்சுவார்த்தை நடத்துவது என்பதில் அரசாங்கம் அழுங்குப் பிடியாக நிற்கிறது.

பேச்சு நடத்துவதற்கு முன்வந்த பின்னர், அடுத்த தரப்பின் நல்லெண்ண நடவடிக்கையில் நம்பிக்கை வைக்காமல், சந்தேகங்களை வெளியிடுகிறது. தனது இந்த அர்த்தமற்ற செயலை நியாயப்படுத்தும் விதத்தில் காரணங்களை வேறு பிரமாதப்படுத்துகிறது. விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தத்துக்குப் பதிலாகத் தாம் போர் நிறுத்தம் செய்யப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறது.

இதே அரசாங்கம், நாட்டின் நிதித்தேவைக்கும் அபிவிருத்திக்கும் வெளிநாடுகளின் உதவிகளையும் கடன்களையுமே மிகக் கணிசமான அளவு நம்பியிருக்கிறது. ஆகையால் போரை நிறுத்துமாறு அதன் மீது அழுத்தம் போடக்கூடிய சக்தி வெளிநாடுகளுக்கு உண்டு. தமிழர்கள் — தமிழ்க் கட்சிகள் — போர் நிறுத்தம் கோரி ஒன்று பட்ட குரலில் ஒலிப்பதை வெளிநாடுகள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். போர் நிறுத்தம் கோருவது நியாயமானதே என்பதனைஉணர்ந்து அதற்குச் செவி சாய்த்து தமது சக்தியைப் பயன்படுத்த வேண்டுகிறோம்.

# பல்கலை சமூகத்தின் எழுச்சிக்கு பேதமின்றி ஆதரவு வழங்குவோம்!

## முற்றவெளி அஞ்சலி நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம் ஜன. 11

தமிழர்களின் அபிலாசைகளை சர்வதேசத்துக்கும் தெரியப்படுத்தும் நோக்குடன் யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் முன்னெடுக்கப்படும் எழுச்சி நிகழ்வுக்கு எவ்வித பேதங்களும் இன்றி அனைவரும் ஆதரவும் பங்களிப்பும் வழங்கவேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ். முற்றவெளியில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தவர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினரும், யாழ். மாநகர சபை உறுப்பினருமான ச. ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

மாநகர சபை உறுப்பினர் மு. தவநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை அரசு பயன்படுத்தத் தவறினால் எதிர் காலத்தில் பெரும் விளைவுகளை நாடும் மக்களும் எதிர்நோக்க வேண்டிவரும்.

தமிழ் பேசும் மக்களின் சுதந்திரம் மறுக்கப்பட்டு அவர்கள் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்பது தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை மூலம் உலகம் அறிந்த உண்மை.

இவற்றுக்கு எதிராக எத்தனையோ போராட்டங்கள், எதிர்ப்புக் குரல்கள் எழுந்தும் கூட இன்றுவரையும் முடிவு இல்லாமல் படுகொலைகளும் அடக்குமுறைகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்போமானால் எமது மக்களுக்கு விரைவில் விடுதலை கிடைத்துவிடும்.

தென்னிலங்கையில் மாறி மாறி வரும் அரசுகள் இங்கு இனப்பிரச்சினை என்று ஒன்றுமில்லை, பயங்கரவாதமே இங்கு இருக்கின்றது என மழுப்பி வருகின்றன.

செம்மணி, வெலிக்கடை, பண்டாரவளை, மிருசுவில் போன்ற படுகொலைகள் எவருடைய பயங்கரவாதம்? இத்தகைய கொலைகள் நிறுத்தப்படாதுவிடின் தமிழீழப் போராட்டம் என்பது என்றுமே நிறுத்தப்பட முடியாத ஒன்றாகிவிடும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

வல்வை நகர சபைத் தலைவரும் ரெலோ முக்கியஸ்தருமான எம். கே. சிவாஜிலிங்கம், ரெலோவின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் என். கே. விந்தன், யாழ். மாநகர சபை உறுப்பினர் செ. கந்தையன், யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ம. அலோசியஸ் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

(ஐ-5)

## அபிவிருத்தி இணைப்பாளர்கள் நிரந்தர நியமனம் பெற்றனர்

வலி தென்மேற்கு, ஜன.11

யாழ். மாவட்ட பரதேச செயலகங்களில் கடமையாற்றும் 14 அபிவிருத்தி இணைப்பாளர்களுக்கு கடந்த 16 - 05 - 2000 இல் இருந்து நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சு செயலாளரினால் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிரந்தர நியமனம் பெற்ற அபிவிருத்தி இணைப்பாளர்களது விவரம்:-

★ ம. றொய்டீ ராஜன் (நெடுந்தீவு பி. செயலகம்), செல்வி கு. தர்மலிங்கம் (வேலணை பி. செயலகம்)' செ. அன்டர்சன் (ஊர்காவற்றுறை பி. செயலகம்), செல்வி சுமதி கணேசன் (யாழ். பி. செயலகம்), திருமதி கௌசால தவசொரூபன் (நல்லூர் பி. செயலகம்)' செல்வி உ. தர்மலிங்கம் (கோப்பாய் பி. செயலகம்), திருமதி யாழினி நந்தகுமார் (தெல்லிப்பழை பி. செயலகம்), திருமதி சிவராணி ரவிக்குமார் (உடுவில் பி. செயலகம்), செல்வி பொன்மதி அருள்துரை (சண்டிலிப்பாய் பி. செயலகம்), திருமதி பானுமதி ரவீந்திரன் (சங்கானை பி. செயலகம்), விஸ்வநாதக்குருக்கள் சொக்கநாதன் (சாவகசேரி பி. செயலகம்), ந. ராஜேஸ்வரன் (கரவெட்டி பி. செயலகம்). அ. மைக்கல் ராஜ்குமார் (பருத்தித்துறை பி செயலகம்), செல்வி ஜானகி சுப்பிரமணியம் (மருதங்கேணி பி. செயலகம்) (ம-185)

## பாதீனியம் களை ஒழிப்பு

வலிகாமம், மேற்கு, ஜன. 11

வலிகாமம்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் காணப்பட்ட பாதினியம் களை அழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்காக வீதிகளைத் துப்புரவு செய்யும் பணியையும் தொடர்ந்து வலி. மேற்கு பிரதேச சபை ஊழியர்கள் ஒரு வாரத்துக்கு மேற்கொண்டனர்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமைச் செயலக ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி உப அலுவலக ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து மேற்படி பணியில் ஈடுபட்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைவர் ந. திரிலோகநாதன் மேற்கொண்டிருந்தார். (ஐ—175)

## குளவி கொட்டி இருவர் ஆஸ்பத்திரியில்


நெல்லியடி, ஜன. 11

பட்டம் கட்டுவதற்கு வடலி மட்டை வெட்டச் சென்ற இரு சகோதரர்கள் குளவி கொட்டியதனால் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் கொற்றாவத்தை, வதிரியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சகோதரர்களான நவரத்தினசாமி-நரேஷன் (வயது 12), நவரத்தினசாமி - நவீனன் (வயது 16) ஆகியோருக்கே குளவி கொட்டியுள்ளது.

(ம-109)



## சாயி சிந்தனை

இறைவன் எங்கே இருக்கின்றான்? அவன் இருப்பிடம் எது? என்றெல்லாம் ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. ஆண்டவனைத் தேடி அலைய வேண்டாம். அவன் எப்போதும் உன்னுடனேயே இருக்கின்றான். அவன் உன்னுள்ளேயிருப்பதை அறியாமல் நீ வெளியில் அவனைத் தேடி அலைவதைப் பார்த்து அந்த ஆண்டவனே சிரிக்கின்றான்.

முதலில் உன்னை நீ உணர்ந்து கொள். அப்போதுதான் நீ இறைவனை உணர முடியும். ஆண்டவன் அன்பின் அடையாளமாக உன்னுள்ளேயிருப்பதை நீ உணர்ந்து கொள்.

அப்போது நீ இறைவனைக் கண்டு விடலாம்.

ஆதாரம்: சனாதனதர்மம்.

## ஓட்டுமடம் ஊடாக இன்று முதல் பஸ்சேவை

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ்ப்பாணம் — மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் ஊடாக இன்றுமுதல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் நடைபெறவுள்ளன.

கடந்த ஆறு வருடங்களாகப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த இந்தப் பாதை நேற்று முன்தினம் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளதை அடுத்தே இந்தப் பாதை ஊடான பஸ் சேவைகளை நடத்துவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்பாதையூடாகச் சேவையில் ஈடுபடும் பஸ்களும் அவற்றின் பாதை இலக்கங்களும் வருமாறு:-

★ யாழ்ப்பாணம் — மாதகல் (787),

★ யாழ்ப்பாணம் — இளவாலை (788).

★ யாழ். — அராலி— வட்டுக்கோட்டை — சித்தன்கேணி— சுழிபுரம் — காரைநகர் ( 789)

★ யாழ். — வட்டுக்கோட்டை — காரைநகர் (784),

★ காரைநகர் — மூளாய் — நவாலி — யாழ்ப்பாணம் (786),

★ யாழ்ப்பாணம் — சுழிபுரம கிழக்கு (736),

★ யாழ்ப்பாணம்—மானிப்பாய் ஊடாக — காரைநகர் (782),

★ காரைநகர் — யாழ்ப்பாணம் (783)

(ஐ-5)

## முதியோருக்கு உதவி

வலி.தென்மேற்கு, ஜன. 11

இராணுவ நடவடிக்கையினால்இடம்பெயர்ந்து மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் வசிக்கும் கைதடி முதியோர்கள் 125 பேருக்கு இலங்கை வங்கி காங்கேசன்துறை நலன்புரிக்கழகம் அண்மையில் உணவுப் பொருள்களை வழங்கியது.

வயோதிபர்களுக்கு விருப்பமான 'அரிச்சந்திரா' மயான காண்டம் நாடகமும் அங்கு நடித்துக் காண்பிக்கப்பட்டது. (ம-185)

### உதயவாக்கு

கடவுளுக்கு அஞ்சு; அடுத்தபடி, கடவுளுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சு.

## கலந்துரையாடல்

ஆசிரிய உள்ளீர்ப்பு, இடமாற்றங்கள் மற்றும் பாடசாலைக்கல்வி, அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வடக்கு கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலுக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அழைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது (ஐ-10)

## கடமையைப் பொறுப்பேற்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 11

கோப்பாய், பலாலி ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இருந்து தற்பொழுது வெளியேறவுள்ள யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் அனைவரும் தாம் ஏற்கனவே கற்பித்த பாடசாலைகளில் கடமையை ஏற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விபணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்குரிய கடிதங்கள் அந்தந்தப் பாடசாலைகளுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-10)

## செயலகத்தில் நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 11

உணவு, எரிபொருள் மற்றும் பாண் விநியோகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள். கூட்டுறவுச்சங்கத்தலைவர், பொது முகாமையாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர், பெற்றோலிய கூட்டுத்தாபன பொறுப்பதிகாரி, யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க பிரதிநிதிகள், உள்நாட்டு வியாபாரப் பரிசோதகர்கள் மற்றும் யாழ் மாவட்ட பாவனையாளர் சங்கப் பிரதி நிதிகள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார் (3-6)

## நாளை

மார்கழி 28

வெள்ளிக்கிழமை

திதி: திருதியை

முன் இரவு 8.12 வரை

நட்சத்திரம்: ஆயில்யம்

பிற்பகல் 12 31 வரை.

சுபநேரம்: 6.33— 8 03

ராகுகாலம் 11 03 —12 33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# பனை அபிவிருத்திச் சபையின் பொறுப்பில் திக்கம் வடிசாலை

நெல்லியடி, ஜன. 11

பனை தென்னை வள அபிவிருத்திக் கொத்தணியின் கீழ் சுமார் 8 வருட காலம் இயங்கி வந்த திக்கம் வடிசாலை கடந்த 8 ஆம் திகதி முதல் பனை அபிவிருத்திச் சபையால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வைபவம், கடந்த 8 ஆம் திகதி திக்கம்வடிசாலையில், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எம். பாக்கியநாதன், தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவு உதவி ஆணையாளர், பனை அபிவிருத்திச் சபை மேல் நிலை உத்தியோகத்தர்கள். முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் சி. வேலாயுதபிள்ளை ஆகியோர் முன்னிலையில் திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சபை பொறுப்பேற்றது.

21-12-2000 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் திக்கம் வடிசாலையை பொறுப்பு ஏற்கும்படி, பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பணிக்கப்பட்டிருந்தார். இதனையடுத்தே, வடிசாலையை பனை அபிவிருத்திச்சபை பொறுப்பேற்றது.

திக்கம் வடிசாலையை பனை அபிவிருத்திச் சபை பொறுப்பேற்றது குறித்து சபைத் தலைவர் எம். பாக்கியநாதன் தெரிவித்ததாவது:-

பல வருட காலம் நஷ்டத்தில் இயங்கி வந்த திக்கம் வடிசாலைக்கு இரண்டரை வருடகால வரி விலக்கு எடுத்துக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் நிதி நெருக்கடியில் மூழ்கியிருந்தது. இக்காலகட்டத்தில் தொழிலாளர்களுக்கு அதிகளவுபணக்கொடுப்பனவு செய்யப்படவேண்டி உள்ளது.

இந்த நிலையில் தென்பகுதி சாராயத்துடன் போட்டி போடும் அளவுக்கு இங்கு தயாரிக்கப்படும் சாராயம் உயர்தரத்துடன் அமையவில்லை. யாழ் மாவட்டத்தின் சந்தையினை நம்பி ஒரு குறுகிய வட்டத்தில். வடிசாலை இயங்கி வந்துள்ளது.

சீவல் தொழிலை நம்பி இருக்கும் தொழிலாளிகளுக்கு சிரமம் இன்றி கொடுப்பனவுகளை வழங்கவும், வருமானத்தை மேலும் அதிகரிக்கவும் உடனடி நடவடிக்கையை பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளும்.

திக்கம் வடிசாலையில் நவீன இயந்திரங்களைப் பொருத்தி உற்பத்தியை சர்வதேச தரத்துக்கு உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

இதேவேளை —

சந்தைப்படுத்தும் பகுதியினை மிக வலுவுள்ளதாக்கி தென்பகுதிக்கும், வெளிநாடுகளுக்கும் சாராயம் ஏற்றுமதி செய்யப்படும்.

இதன் பொருட்டு இவ் வருடம் மூலதன செலவினத்தில் இருந்து பனை அபிவிருத்திச் சபைக்கு 50 இலட்சம் ரூபாவைவடக்குபுனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒதுக்கியுள்ளார்.

திக்கம் வடிசாலையை மேம்படுத்தும் நோக்கில் இவ் வருடத்திற்கு வரி விலக்கை எடுத்துத் தருவதற்கும் அமைச்சர் முன்வந்துள்ளார்.

பாரிய அபிவிருத்திகளை துரிதமாக்கவும் அரச நிதி ஒதுக்கீடுகளை சீவல் தொழிலாளர்களின் நன்மைக்கு பயன்படுத்தவும் வாய்ப்பு உருவாகி உள்ளது.

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எம். பாக்கியநாதன் மேலும் தெரிவித்தார்.

(ம-109)


## நெஞ்சார நன்றி நவில்கின்றோம்

யா/புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில்

தனது சேவையில் 25 வருட ஆசிரிய கல்விச் சேவையை 10-01-2001 இல் நிறைவு செய்து இன்று தன் 60-வது அகவையைக் கொண்டாடும் ஆசிரியர்

### திரு. சு. வி. மரியதாஸ்

அவர்களுக்கு நெஞ்சார நன்றி நவில்வதுடன் பிறந்த நாள் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/புனித சாள்ஸ் ம. வி.

(82811(



## கலந்துரையாடல்

வடபிரதேசத்தில் இயங்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் இடையேயான கலந்துரையாடலொன்றினை ஏற்பாடு செய்துள்ளோம்.

காலம்:- நாளை (12-01-2001) வெள்ளி 3-00 மணி

இடம்:- பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடம்

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று சமுகந்தருமாறு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை அன்புடன் வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(8281 )



## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி செ. கிருஷ்ணபாலாவின்
அன்புத் தந்தையார்

### தர்மலிங்கம் திருநாவுக்கரசு

அவர்களது மறைவையறிந்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்,
யா/நல்லூர் இந்து தமிழ்ப்
பெண்கள் பாடசாலை.

(82802)



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் பணியாளர்
வை. மனோரஞ்சன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### அமரர் பூலோகசுந்தரம் வைத்தியநாதன்

அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ். மாவட்ட சித்த மருந்துகள்
உற்பத்தி விற்பனவு வைத்திய
சேவைக் கூட்டுறவுச் சங்கம்.

[82796]


## அலுவலகம் இடம் மாற்றம்

தென்மராட்சி, ஜன. 11

இதுவரை ஆனைக்கோட்டையில் இயங்கி வந்த பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகம். கிராமிய வங்கி ஆகியவை கடந்த வாரம் முதல் கோண்டாவில் சந்திபலாலி வீதியில் உள்ள தனியார் கட்டடமொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதியில் தங்கியுள்ள பளைப் பிரதேச மக்களின் போக்குவரத்து நலன்கருதி இடம் மாற்றப்பட்டுள்ளதாகச் சங்கத் தலைவர் சு. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-117)

## பச்சிலைப்பள்ளி விளையாட்டுக் கழகங்களுக்கு

தென்மராட்சி, ஜன. 11

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலிருந்து, இடம்பெயர்ந்துள்ள விளையாட்டுக் கழகங்கள் தமது செயற்பாடுகளைத் தொடர்வதற்காக உடனடியாக யாழ்ப்பாணம் ஈழநாடு நிறுவனத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலனோன்புச் சங்கத்தில் செயலாளர், ஆ. கேதீஸ்வரனை சந்திக்குமாறு சங்கத் தலைவர் சு. தவரடணசிங்கம் அறிவித்துள்ளார்.

(ஒ-117)

# பாடசாலைகள் மூடப்படுவதால் சமூகவிரோதிகளாகும் சிறுவர்

## அடிக்கல் நடும் வைபவத்தில் உரை

காரைநகர், ஜன. 11

கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகள் மூடப்படுவதால் கல்வி வாய்ப்பை இழக்கும் சிறுவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு சிறைச்சாலைகளுக்குச் செல்கின்றனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. அமைப்பின் தீவுப் பகுதி அமைப்பாளருமான ந. மதனராஜா இவ்வாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலத்திற்கு மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்து உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் அருட் சகோதரி தனநாயகி செபமாலை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து உரையாற்றுகையில்தெரிவித்ததாவது:-

கிராமப்புற மக்களின் கல்வி அபிவிருத்திக்காக புதிய பாடசாலைகள்திறக்கப்பட வேண்டும் அதைவிடுத்து இருக்கின்ற பாடசாலைகளையும் மூடக்கூடாது.

பாடசாலைகள் மூடப்படும் போதுசமூக விரோதச்செயல்கள் அதிகரிக்கின்றன.

கல்வித்துறை அபிவிருத்தி அடையும்போதுதான் சிறந்த கல்விச்சமூகத்தை உருவாக்க முடியும். தீவகக் கல்வி வலயத்தில் மூடப்பட்ட பாடசாலைகள் திறக்கப்படவேண்டும்.

தீவகக் கல்வி வலயம் தீவுப் பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான பல சேவைகளைச் செய்து வருகின்றது. எமது கட்சியும் இவ் வலயத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு ஏற்ற சகல உதவிகளையும் வழங்க உள்ளது என்றார்.

(ம-73)

## ஒன்றுகூடல்

வலிகாமம் மேற்கு, ஜன. 11

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக நலன்புரிச்சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஒன்றுகூடல் வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், திட்டப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(ம-175)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நடராசா யோகமலர்

நெல்லியடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகமலர் நடராசா 09—01—2001 செவ்வாய்க் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள படவரைஞர் தம்பையா நடராசாவின் அன்பு மனைவியும், சுதாகரின் (பொறியியலாளர்—அமெரிக்கா) அன்புத் தாயாரும், திருமதி ஜகஜனனி சுதாகர் அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11—01—2001) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. தர்மலிங்கம்
(சகோதரன்)
''லிங்கவாசா''
நெல்லியடி,
கரவெட்டி.

S1, Anderson Flats,
Colombo—05.
T. P. 01-580882.

(82799)

### குமரையா ரகுநாயக சுந்தரம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட குமரையா ரகுநாயக சுந்தரம் 9-1-01 அன்று கொழும்பில் காலமாகி விட்டார்.

இவர் குமரையா - இரத்தினம் தம்பதிகளின் மகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், நவரத்தினம் - தனபாக்கியம் தம்பதிகளின் மருமகனும், ரவிச்சந்திரன், சுமதி, ராஜி, சுரேஸ், மகேந்திரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரசங்காரசிவம், கிளி, ரசிகன் ஆகியோரின் மாமனாரும், துஷா, நிவிதா, கார்த்திக் ஆகியோரின் பேரனும், நாகேஸ்வரி, ராஜேஸ்வரன், தங்கேஸ்வரன், தங்கேஸ்வரி, யோகேஸ்வரன், இரத்தினேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், சாந்தியின் [உரும்பிராய்] மைத்துனரும், போதகர் தயானி வில்லியம் அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11-01-2001) புதன்கிழமை மாலை 4 மணிக்கு வத்தளையில் நடைபெறும்.

துக்க நிகழ்வுகள் உரும்பிராய் போதகர் தயானி இல்லத்தில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
போதகர் தயானி வில்லியம்
சாந்தி (மைத்துனி).
உரும்பிராய்.

அ. சூரசங்காரம்
218, ஈரவலபிட்டி வீதி,
ஹெந்தல, வத்தளை.
T.P. 074 812 768.

(82800)

# யுத்த நிறுத்தத்தை அரசு நிராகரித்து மக்களின் மனதில் வேல் பாய்ச்சிவிட்டது!

## ரெலோ அறிக்கை

விடுதலைப் புலிகள் ஒருதலை பட்சமாக அறிவித்த யுத்தநிறுத்தத்தை அரசு நிராகரித்திருப்பது சமாதானத்தை விரும்பும் மக்களின் மனதில் வேல் பாய்ச்சியது போன்று மாறி விட்டது.

ரெலோ அமைப்பு வெளியிட்ட ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், பிரசாரச் செயலாளருமான என்.கே.விந்தன் விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை நீண்டநாள் மௌனத்தின் பின் தங்களுக்கு "புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை" என்ற சாட்டைக் கூறி அரசு நிராகரித்துள்ள செயலால் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் பெரும் ஏமாற்றமும் அச்ச உணர்வும் ஏற்பட்டுள்ளது.

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை தமிழ்மக்கள் இன்முகத்துடன் வரவேற்றனர். குறிப்பாக யாழ்.குடாநாட்டு மக்கள் ஜனாதிபதி நாடு திரும்பியதும் போர் நிறுத்தத்தை அறிவித்து, சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பார் என்று எதிர் பார்த்திருந்தனர்.

அடைபட்ட சிறைபோல் இராணுவ வேலிக்குள் அடக்கி வைக்கப்பட்டிருக்கும் நாம் விடுவிக்கப்படுவோம், பாதை திறக்கப்படும், ஒழுங்கான தரைவழிப் போக்குவரத்து நடைபெறும். பொருளாதாரத் தடைகள் நீங்கும். பொருள்களின் விலைவாசி இறங்கும். மருந்துப் பொருள்களுக்கும் எரிபொருள்களுக்கும் தட்டுப்பாடு நிலவாது. நிம்மதியாகக் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கலாம். சுதந்திரமாக விவசாயம் செய்யலாம். கடலுணவுகள் உட்பட சகல உள்ளூர் உற்பத்திப் பொருள்களையும் ஏற்றுமதி செய்யலாம், அரசு நிவாரணம் என்ற பெயரில் வழங்கும் புழுப் பிடித்த அரிசியை நாம் நம்பி இருக்கத் தேவையில்லை, பேச்சுவார்த்தை மூலம் சுயநிர்ணய உரிமையும் கிடைக்கும். சுதந்திரமாக வாழலாம் என்ற சந்தோசத்தில் மக்கள் இருந்தனர்.

அரசின் யுத்தநிறுத்த நிராகரிப்பானது தமிழ்மக்களின் நெஞ்சங்களில் வேலைப்பாய்ச்சும் செயலாக மாறி விட்டது.

அரசும் அரசுக்கு ஆதரவு வழங்கும் கட்சிகளும் யுத்தத்தில் தீவிர மோகம் கொண்டுள்ளன. குடாநாட்டுக்கான அபிவிருத்தி என்னும் பெயரில் வெளிநாடுகளில் இருந்து உதவியாகவும் கடனாகவும் கோடிக் கணக்கான பணத்தைப் பெற்று யுத்தத்திற்கு விரயமாக்கிக் கொண்டு இருக்கிறார்களே தவிர, உருப்படியாக எந்த அபிவிருத்தியும் இங்கு நடைபெறவில்லை; நடைபெற்றாலும் யுத்தம் இருக்கும்வரை அது ஒரு போதும் நிலைக்கப் போவதுமில்லை.

உதாரணத்திற்கு குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதிக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கின்றது? 25 வருடம் சென்றாலும் பழைய நிலைக்குத் தென்மராட்சி திரும்பாது. இதே நிலைமை யாழ்.குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவாதென என்ன உத்தரவாதம்? தமிழ் மக்கள் தற்போதைய நிலைமையில் எந்த அபிவிருத்தியையும் அபிவிருத்திக்கான அமைச்சையும் ஏற்கத் தயாரில்லை. மாறாக அவர்களின் உடனடி எதிர்பார்ப்பு போர் நிறுத்தம், புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை, இதன் ஊடாக தமிழ் மக்களின் அபிலாசைகளை உள்ளடக்கிய சுய நிர்ணய உரிமை, நீடிய அமைதி வாழ்வு.

தென்மராட்சியின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய புலிகள் தந்திரோபாயமாக சற்றுப் பின்வாங்கியுள்ளனர். புலிகள் விட்டுச் சென்ற பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்த இராணுவம் முயற்சிக்கின்றது. மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தி அகலக் கால் வைத்து மரணப் பொறிக்குள் தாங்கள் விழப் போவதுமல்லாமல் மக்களையும் தள்ளிவிட முயற்சிக்கின்றார்கள். அங்கு பதற்ற நிலைமை தணிந்து, சுமுகமான நிலைமை தோன்றி, கண்ணிவெடிகள் அகற்றப்படாதவரை யாரும் அங்கு சென்று தங்க வேண்டாம் என நாம் கேட்டுக்கொள்வதுடன் அண்மையில் வீடு பார்க்கச் சென்ற எட்டுப்பேருக்கும் இராணுவத்தால் என்ன நடந்தது என்பதையும் மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அரசின் பங்காளிகளான சில தமிழ் அரசியல்வாதிகள் கூட நீங்கள் மீளக் குடியமருங்கள் உங்களுக்கு நாங்கள் வேலிகளாக இருப்போம் எனக் கூறுவார்கள். இவர்களை நம்புவதைவிட மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வின் மூலம் இலங்கைவாழ் தமிழ்மக்களின் அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க போரை நிறுத்துங்கள், புலிகளுடன் பேசுங்கள் என அரசை வெளிநாடுகள் நிர்ப்பந்திக்க வேண்டும் எனக்கோரி எமது ரெலோ இயக்கம் உட்பட 11 தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் நின்று ஒருமித்த குரலில் தமிழின விடுதலைக்கான புனிதப் பணியின் பல சவால்களுக்கும் மத்தியில் துணிந்து நின்று தீவிரமாகச் செயல்படுவதை தமிழ்த் தேசிய இனம் வெகுவாக வரவேற்றுக்கொண்டு இருப்பது ஒருபக்கம் இருக்க, அரசின் பங்காளிகள் அஞ்சவும் தொடங்கி விட்டார்கள். 11 கட்சிகளினதும் குறிக்கோள் வெற்றிபெற இலங்கை வாழ் அனைத்துத் தமிழ்மக்களும் தங்கள் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் மென் மேலும் நல்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களின் பவள விழா அண்மையில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்குவதையும் நகுலேஸ்வரக் குருக்கள் தம்பதியினர் மேடையில் வீற்றிருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ)




மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் வயிற்றோட்ட நோய் சம்பந்தமான கருத்தரங்கு அண்மையில் கோப்பாய் சூசையப்பர் ஆலயப் பகுதியில் இடம்பெற்றது.

இக் கருத்தரங்கின் இறுதியில் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் சவர்க்காரம் வழங்கப்பட்டது.

கருத்தரங்கில் கலந்துகொண்ட தாய் ஒருவருக்கு யாழ்.மருத்துவ பீட மாணவி ஒருவர் சவர்க்காரம் வழங்குவதைப் படத்தில் காணலாம். *(படம் : வலி.கிழக்குச் செய்தியாளர்)*

## இன்று கூடைப் பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.வை.எம்.சீ.ஏயின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலை மட்டத்தில் நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆடுகளத்தில் இடம்பெறும். ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணிக்கு திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி. எதிர் கொக்குவில் இ.க.

★ மாலை 5 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி. (ஐ-8)

# வாசகர் திருமுகம்

## அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

தங்களது பத்திரிகையில் கடந்த மாதம் 15ஆம் திகதி எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கத்தில் 'மக்களைக் காப்பாற்று' என்ற தலைப்பில் எழுதப்பட்ட விடயங்கள் பாவனையாளர்கள், கூட்டுறவாளர்கள், அரச அதிகாரிகள் ஆகியோரின் கவனத்தை ஈர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதில் எழுதப்பட்டுள்ள கருத்து இனி வரும் காலங்களில் இப்படியான விடயங்கள் நடைபெறாது பார்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. இப்பொறுப்பு அரச அதிபருடையதோ அல்லது கூட்டுறவுச்சங்க அதிகாரிகளுடையதோ ஆகும்.

ஆனால் யாழ்.செயலக அதிகாரிகள் தாம் பழைய பழுதடைந்த அரிசியை விநியோகத்துக்குக் கொடுப்பதில்லை எனவும் -

கூட்டுறவுச் சங்கத்தினரோ இப்படியான அரிசியே தமக்குக் கிடைக்கின்றது எனவும் -

கூறுகின்றனரே தவிர ஏழை மக்களுக்கு ஒரு நேரம் உணவாகக் கிடைக்கின்ற அரிசியை நல்லதாகக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

உணவுப் பொருள்களின் தரங்களை பரிசோதித்து அவை தரமானவை தானா என்று முடிவு செய்ய யாழ்.சுகாதாரத் திணைக்களத்தில் தகுதி வாய்ந்த உணவு மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரை செயலகக் களஞ்சியத்தில் உணவுப் பொருள்களின் தரத்தைப் பரிசோதிக்கும்படி செயலகமோ அல்லது பழுதடைந்த அரிசி கிடைத்துள்ளது அதைப் பரிசோதித்து அறிக்கை தரும்படி கூட்டுறவுச் சங்கத்தினரோ கேட்டிருக்கலாம். இதன் மூலம் எங்கு தவறு நடைபெறுகின்றது என்பதைக் கண்டறிய முடியும்.

மக்கள் நலன் கருதி அதிகாரிகள் ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டாது தகுதி வாய்ந்த அதிகாரி மூலம் பரிசோதனை மேற்கொண்ட பின்னர் பொருள்களின் விநியோகத்தை மேற்கொள்வதே சாலச்சிறந்ததாகும்.

உடுவில். ம.மகேந்திரன்.

## மணல் ஏற்றுவதைத் தடை செய்க

வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மணல் ஏற்றப்படுகிறது. இது பல காலமாக மிகச் சிறிய அளவில் இடம்பெற்று வந்தது. அப்போது இது அப்பகுதிகளைப் பெரிதாகப் பாதிக்கவில்லை. ஆனால் இப்பொழுது யாழ் மாவட்டத்தவரின் மிக வருவாய் தேடித் தரும் ஒரு தொழிலாக மணல் விற்பனை மாறிவிட்டது. இதன் விளைவாக வடமராட்சி கிழக்கின் சில பகுதிகள் அழிக்கப்பட்டு விட்டன. மற்றும் சில பகுதிகளிலும் அழிப்பு நடவடிக்கை தொடர்கிறது.

வடமராட்சிக் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் முருகைக் கற்பாறைகள் இல்லாமை யாவரும் அறிந்ததே! அந்தவகையில் பெரும் மணல் புட்டிகளே கடலரிப்பைத் தடுக்கும் சக்தியைப் பெற்றிருந்தன. இதனால் அப்பகுதி மக்களுக்கு கடலரிப்பு அபாயம் குறைவாகக் காணப்பட்டது. ஆனால் இப்போது அம்மணல் புட்டிகள் பல அழிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் கடல்மட்டத்துக்குக் கீழாக மணல் ஏற்றப்பட்டு அவை பள்ளமாகக் காட்சியளிக்கின்றன. இதனால் அப்பகுதி மக்கள் கடலரிப்பு ஆபத்துக்கு உட்பட்டுள்ளனர். இதன் விளைவைக் கருத்திற் கொள்ளாது உரிய அதிகாரிகள் கவனயீனமாக இருப்பது அப்பகுதி மக்களுக்கு கவலை தரும் விடயமாக உள்ளது.

யாழ்ப்பாணத்திலே "மண்கும்பான்" மற்றும் ஏனைய பிரதேசங்களிலும் மணல் ஏற்றக் கூடிய நிலைமை காணப்படுகிறது. ஆனால் அப்பகுதிகளுக்கும் வடமராட்சி கிழக்கிலிருந்தே மணல் கொண்டு செல்லப்படுகிறது. இது எதனைப் படம் பிடித்துக் காட்டுகிறது எனில் அப்பகுதியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அதிகாரம் ஓங்கி நிற்கிறது. எனவே அங்கு மணல் ஏற்ற முடியவில்லை. ஆனால் இங்கே அதிகாரிகள் தமது அதிகாரத்தை இழக்கியிருக்கிறார்கள். இதனால் இப்பகுதிகள் அழிக்கப்படுகின்றன.

அண்மையில் வடமராட்சி கிழக்குப் பிரஜை ஒருவர் சமுர்த்தி ஊக்குவிப்பாளராகக் கடமைபுரிபவர், கடமை நிமித்தம் மணல் ஏற்றுமிடத்தைப் பார்க்கச் சென்ற போது அங்கு மணல் ஏற்றியவர்கள் அவரை அவதூறாகப் பேசியதுடன் அவரின் முகத்துக்கு முன் துப்பி அவரைத் தாக்க முற்பட்டுள்ளனர்.

எனவே இனியாவது உரிய அதிகாரிகள் மணல் ஏற்றுவதைத் தடை செய்வார்களா?.....

அத்துடன் மணல் ஏற்றும் நடவடிக்கைக்கு எதிராக செயற்பட எமது பிரதேச மக்கள் முன்வரவேண்டும்.

வடமராட்சி கிழக்கு. சமூக சேவையாளன்.

# தென்மராட்சி வலய அலுவலகத்தின் ஆவணங்கள், கோவைகள் மீட்பு!

தென்மராட்சி,ஜன.11

தென்மராட்சி கல்விவலய அலுவலகத்தில் கைவிட்டு வந்த சுய விவரக் கோவைகள் உட்படப் பல ஆவணங்கள், தளபாடங்கள் கொண்ட ஒரு தொகுதி 7 மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் வலய அலுவலக உத்தியோகத்தர்களால் மீட்டு வரப்பட்டன.

மட்டுவரப்பட்ட சுயவிவரக் கோவைகளில் எண்பது வீதமானவை நல்ல நிலையிலுள்ளன. பத்து வீதமான கோவைகள் அலுமாரியிலிருந்து வெளியே தூக்கி வீசப்பட்டு நனைந்த நிலையில் மீட்கப்பட்டன. பத்து வீதமான சுய விவரக் கோவைகளைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் சுயவிவரக் கோவைகள், கல்வி அபிவிருத்திப் பிரிவு கோவைகள், பாடசாலைகளின் வேலைப் பகுதிக கோவைகள், நிதிப் பிரிவுக் கோவைகள், கொடுப்பனவுப் பேரேடுகள் போன்றவற்றையும் அலுவலக தளபாடங்கள், அலுமாரிகள் சிலவும் மீட்கப்பட்டுள்ளதாகவும் -

எஞ்சியுள்ள ஆவணங்கள், தளபாடங்கள் என்பனவும் விரைவில் மீட்டுவரவுள்ளதாகவும் -

வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்.

நிதிப் பிரிவு இயங்கிய கட்டடம் முற்றாக சேதமடைந்ததால் பல முக்கியமான ஆவணங்கள் இடிபாடுகளுக்குள் காணப்படுவதாகவும் அவற்றினை மீட்க முடியவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட ஆவணங்கள் நனைந்து பாவிக்க முடியாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன. அங்கிருந்த இரும்புப் பெட்டகம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு உடைக்கப்பட்டுள்ளது. வலய அலுவலக களஞ்சியப் பகுதி வெறுமையாக காணப்படுகிறது. அலுவலகத்திலிருந்த ஜெனரேற்றர், போட்டோபிரதி இயந்திரங்கள், கணனிகள், றோணியோ, தட்டச்சு இயந்திரங்கள் அனைத்தும் காணாமல் போயுள்ளன.

அலுவலக மாநாட்டு மண்டபம் எரிந்து காணப்படுகிறது. அலுவலகத்தில் இருந்த அலுமாரிகளில் துப்பாக்கியினால் சுடப்பட்டுத் திறக்கப்பட்டு அவற்றிலிருந்த கோவைகள், ஆவணங்கள் வெளியே தூக்கி வீசப்பட்டிருந்தன. அலுமாரிகளில் துப்பாக்கி ரவை துளைத்த துவாரங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு அங்கு சென்று திரும்பியோர் தெரிவித்தனர்.

(ஐ-117)

## தென்மராட்சி வலயத்துக்கு பட்டதாரிகள் ஐவர் நியமனம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைக்கென ஐந்து பட்டதாரி பயிலுநர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரங்களும் நியமனம் கிடைத்த பாடசாலைகளின் விவரமும் வருமாறு:-

❊ க.சிவப்பிரகாசம் - விடத்தற்பளை, மிருசுவில். (உசன் இராமநாதன் ம.வி.)

❊ வனிதா நவரத்தினம் - யாழ்ப்பாணம் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

❊ செல்லையா இளங்கோ - மருதங்கண்டு - கரவெட்டி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

❊ தேவரதி மகாலிங்கம் - நாவற்காடு, வரணி. (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

❊ கந்தையா சுகுந்தா - உசன், மிருசுவில்.(நாவற்குழி ம.வி.)

(ஐ-117)

# யாழ்.கல்வி நிலை குறித்து மார்ச்சில் உயர் மாநாடு

யாழ்.மாவடத்தில் கல்விச் செற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் கல்விச் செயற்பாடுகளில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குமாக உயர்மட்ட மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சினால் இந்த மாநாடு கூட்டப்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் மத்திய, மாகாண மாவட்ட மட்டங்களில் உள்ள கல்வி சார் உயர் அதிகாரிகள் பங்குபற்றவிருக்கின்றனர்.

இந்த மாநாட்டில் கல்வி அபிவிருத்தி குறித்த எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு வசதியாக திட்டமுன் மொழிவுகளை மற்றும் கல்விச் செயற்பாட்டில் நிலவுகின்ற பிரச்சினைகளை 'யாழ்ப்பாண கல்வி அபிவிருத்திக்கான உயர்மட்ட மாநாட்டு ஏற்பாட்டுக்குழு, வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு யாழ். அலுவலகம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்புமாறு அந்த அமைச்சு பொதுமக்களிடமும் கல்வித்துறைசார் நிறுவனங்களிடமும் கேட்டுள்ளது. (ஜ-3)

# சட்டவிரோதமாக மின் பெற்ற ஐவர் பொலீஸாரினால் கைது

நெல்லியடி ஜன.11

இரவுவேளை, சட்ட விரோதமான முறையில் மின் கம்பத்திலிருந்து, மின்சாரம் பெற்ற ஐவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து மின்சார வயர்களும் மீட்கப்பட்டன.

துன்னாலை, இராச கிராமம் பகுதியில் களவாக மின்சாரம் பெறுவதாக நெல்லியடி பொலீஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, கடந்த திங்களன்று நள்ளிரவு இப்பகுதிக்குச் சென்ற பொலீஸார் குறித்த ஐவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.(ம-109)

## பார்வையாளர் அரங்கு அமைப்பு

வலிகாமம் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பார்வையாளர் அரங்கு அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை பெற்றுத் தர வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

இதற்கான விரிவான மதிப்பீட்டுத் திட்டத்தை பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனின் பணிப்பின் பேரில் தொழில்நுட்ப உத்தியோத்தர் வி.அரியபுத்திரன் தயாரித்துள்ளார். (ம-185)

## இசைக் கச்சேரி

இந்திய தேசத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர மாமணிகளின் நாதஸ்வர-தவில் இசைக்கச்சேரி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொட்டாஞ்சேனை, ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இசைக்கச்சேரியில் இந்திய நாதஸ்வர மாமணிகளான எம்.கே.எஸ்சிவா மற்றும் எம்கே.எஸ்நடராஜன் சகோதரர்களும் தவில் வித்துவான்களான நமது நாட்டின் கலை மாமணி கே.கணேசபிள்ளை, தவில் சிரோன்மணி. ஆர்.புண்ணியமூர்த்தி, மற்றும் தவில்வித்துவான் என்.ஆர்.எஸ். சுதாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தொடக்கவுரையை கே.கே.சுப்பிரமணியமும் பாராட்டுரையை கம்பவாரிதி. இ.ஜெயராஜும் நிகழ்த்தவுள்ளனர். (ஜ-6)

# நீர் இறைப்பதற்கு கிணற்றுக்குள் இறங்கிய ஐந்து பேர் மயங்கினர்

நெல்லியடி,ஜன.11

ஆலயக் கிணற்றை இறைப்பதற்கு உள்ளே இறங்கிய ஐவர் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர்.

பொலிகண்டி வீரபத்திரர் ஆலய மேற்குப் பகுதியில் மூடப்பட்டிருந்த கிணற்றில் சிறு வழி ஊடாக உள்ளே இறங்கி, கிணற்றைத், துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்ட ஐவரே கிணற்றுக்குள்ளேயே மயங்கினர்.

நீரிறைக்கும் இயந்திரத்தைக் கிணற்றுக்குள்ளே இறக்கி, நீரை வெளியேற்றிய போது இயந்திரம் வெளியேற்றிய புகையால் கிணறு நிறைந்தது என்றும் -

அந்தப் புகையை அல்லது கிணற்றுக்குள் இருந்த வேறு வாயுவை சுவாசித்ததால் இவர்கள் மயக்கமடைந்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

குருசாமி சுகிதரன்(வயது 23), ராசா வீரமேகன்(26) இரத்தினம லோகேஸ்வரன்(33), கனகராசாதவச் செல்வன்(30), பொடியபிள்ளை ரஞ்சிதமோகன்(37) ஆகியோரே மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-109-118)


உ
ஓம் கணபதி துணை
அரி ஓம் நமோ நாராயணய நம

## ஒத்துழைப்பினை நாடுகின்றோம்

அன்னை சாரதாதேவி அவர்களின் ஜெயந்தி தினத்தினைக் கொண்டாடிய மாணவர்களும், வேறு இளைஞர்களும் இணைந்து சுவாமி விவேகானந்தரின் (சுவாமிஜி) ஜெயந்தி தினத்தினை 15-01-2001 அன்று அவரது பாதச் சுவடுகள் பதிந்ததால் பெருமை அடைந்த யாழ். இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் கொண்டாடுவதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. இந்த ஜெயந்தி தினத்தில் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்த நாட்டமுள்ளோர் தொண்டு புரிய ஆர்வமுள்ளோர் கீழ்க்காணும் முகவரிகளுக்கு நேரடியாகவோ அன்றி தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும்.

கு. நக்கீரன்
தாளையடி வீதி,
திருநெல்வேலி.

கு. நக்கீரன்
15/10, இராமநாதன் வீதி,
தலையாழி, கொக்குவில்,
யாழ்ப்பாணம். **T.P 2576**

*பிற்குறிப்புகள்*

1. 11-01-2001 இற்கு முன்னதாக விவரம் தரும்- நிபந்தனைகள் அற்ற - ஆன்மீக சம்பந்தமான கலை நிகழ்ச்சிகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
2. அத்தினத்தில் சமய கலாசார சீரழிவுகளைத் தடுப்பது பற்றி ஆராயப்படும்.
3. சமூக நலன் விரும்பிகளின் ஏற்புடைய ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

(C/14739) - ***ஆன்மீக நாட்டமுள்ள இளைஞர்கள்***



*அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!*

**DCS** இன்

Free Exam to the School Students

**5000 SCHOLARSHIPS**

பாடசாலை மாணவர்களுக்கு இலவச அனுமதிப்பரீட்சையுடன் கூடிய இத்திட்டமானது, விண்ணப்பிக்கத்தவறிய பலரின் வேண்டுகோளுக்கு இணங்க விண்ணப்பமுடிவுத்திகதியானது

15-01-2001

வரை நீடிக்கப்பட்டுள்ளது.

"காத்திருக்கின்றன எதிர்காலத்தில் உங்கள் சாதனைகள்"

DCS, Thirunelvely DCS, Nelliyady



**சயன்ஸ் அக்கடமி**

கலை, வர்த்தகப் பிரிவு

வடமராட்சி மாணவர்களுக்கானது

***A/L 01, 02, 03, DAY***

தமிழ்: செல்வி.பங்கயம்
இ.நாகரிகம் } செல்வி.சுதாமதி
இ.சமயம் }
(82602)



**NEW SCIENCE COLLEGE**

பௌதிகவியல்

திரு.கருணாநிதி BSc.Sp

*பொறியியல் (நிலையியல்)*

SAT., SUN.

பிரிவு I– 9.00 – 10.00
பிரிவு II – 12.00 – 1.00

ஆரம்பம் – 13.01.2001

**PAPER CLASS (2001)**

(82768) SAT,SUN 3.00 - 4.00



## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 1947 - 12 - 08



உதிர்வு 2000 - 12 - 02

### அமரர் சின்னத்துரை விநாயகமூர்த்தி (குஞ்சர்)

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும் எமையெல்லாம் சீராட்டி தாலாட்டி வழிநடத்தி வாழ வைத்த அப்பாவே!
வையகத்திலே தலைநிமிர்ந்து வாழ வைத்த எம் கண்ணுக்கினிய அப்பாவே!

இனி எப்போது உங்கள் அன்பு முகம் காண்போம்!
*உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

எமது அன்புத் தந்தை சிவபதமடைந்த செய்திகேட்டு இறுதி கிரியைகளுக்கு உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் -

இன்று (11.01.2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நிகழும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளில் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

**குடும்பத்தினர்.**

(c/14729)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பூவுலகில் 09 - 10 - 1949



விண்ணுலகில் 13 - 12 - 2000

### அமரர் மயில்வாகனம் விக்னேஸ்வரன்

13.12.2000 அன்று இறைபதம் அடைந்த எனதருமை நாயகர் மயில்வாகனம் விக்னேஸ்வரன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவி செய்தோருக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று (11-01-2001) வியாழக்கிழமை எனது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.

**வி.பத்மேஸ்வரி**
(மனைவி)

*நாவலடி,*
*ஊரிக்காடு,வல்வெட்டித்துறை.*

(82793)

# மாணவர்கள், கல்வியாளர்களை ஒன்றிணைக்கும் விஞ்ஞானச் சங்கம்

*யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான விஞ்ஞான நிகழ்ச்சி இன்று ஆரம்பமாகிறது. அதனை ஒட்டி விஞ்ஞான சங்கத்தின் பணிகளை விளக்கும் இக் கட்டுரை பிரசுரமாகிறது.*

**த**மிழ் மக்களது அரும்பெருஞ் சொத்தான யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்திற்கு எதிர்வரும் மார்ச் மாதத்துடன் 10 வயது பூர்த்தியடைகின்றது. புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் விதத்தில் தமிழ் மக்களின் விஞ்ஞான அறிவை விருத்தி செய்யும் நோக்கினைக் குறிக்கோளாகக் கொண்டு 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் அமரர் பேராசிரியர் அ.துரைராசா அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் ஆற்றிய பணி அளப்பரியது. அதிலும் ஒவ்வோர் ஆண்டிலும் நிர்வாக உறுப்பினர்களாக இருந்து தன்னலங்கருதாது இவ்விஞ்ஞான சங்கத்தை வளர்த்தெடுத்ததன் மூலமாக எம்மின மக்களுக்கு அவர்தம் அறிவுப் பசியை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்வதில் பங்காற்றிய அனைவரும் இங்கு கௌரவிக்கப்படவேண்டியவர்களாவர். குறிப்பாக தமிழ் பேசும் மாணவர்களது விஞ்ஞான அறிவினை மேம்படுத்துவதில் பல வழிகளில் செயற்றிட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செம்மையாக நெறிப்படுத்தியிருப்பது அனைவருக்கும் மன நிறைவைத் தருகின்றதும், மகிழ்ச்சி தருகின்றதுமான செய்தியாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் செயற்பாடுகள் யாழ்பபாணப் பல்கலைக் கழக சுவர்களுக்குள் முடக்கப்பட்டு விடாது பாடசாலைகள் மட்டத்தில் விரிவுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்ற அடிப்படைக கொள்கையின் காரணமாக இன்று இந்த விருட்சம் கிளைகள் பல கொண்டு ஆழவேர் விட்டு மேலோங்கி உயர்ந்து கம்பீரமாக நிற்கின்றது.

## விஞ்ஞானம்

'விஞ்ஞானம்' என்னும் பதம் தனியே கணிதவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல் ஆகிய பிரிவுகளை மட்டும் உள்ளடக்கியதென்ற தப்பபிப்பிராயம் இன்னும் எம் மக்களிடமிருந்து அகற்றப்படவில்லை என்பதனை இவ்வருட விஞ்ஞான போட்டி நிகழ்ச்சிகளுக்காக ஒவ்வொரு பாடசாலைக் கதவையும் தட்டியபோது அனுபவபூர்வமாகத் தெரிந்துகொண்டோம். 'எங்கும் விஞ்ஞானம் எதிலும் விஞ்ஞானம்' என்ற வகையில் தகவல் தொழில்நுட்பம், மருத்துவத்துறை, விவசாயத் துறை, முகாமைத்துவ வர்த்தகத் துறைகள், கலைப்பிரிவு சார்ந்த பொருளியல், அரசறிவியல், வரலாறு, தமிழ மற்றும் ஏனைய மொழிகள், சமயங்கள், புவிச்சரிதவியல் எனப் பரந்துபட்ட விடயங்களை உள்ளடக்கிய பொதுமையான பதமாகவே விஞ்ஞானம் அமைந்துள்ளது. இதனையே யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் விளக்கமாகவும் கொள்ளலாம்.

இவ்வாறான பிரிவுகளனைத்தையும் உள்வாங்கிக் கொள்ளும் நோக்கத்திற்காகவே யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தில் தனித்துவமான நான்கு பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அவையாவன தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், மருத்துவ விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் ஆகியனவாகும். இந் நான்கு பகுதிகளுக்கும் ஒவ்வோர் ஆண்டும் உப குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டு அப் பகுதிகள் சார்ந்த விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் செயற்பாடுகள்

இச் சங்கத்தின் 4 பகுதிகளினாலும் விஞ்ஞானத் தொடர் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், பேச்சு நிகழ்வுகள், ஆய்வுக்கருத்தரங்குகள் என பல்வேறுபட்ட விடயங்களில் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதிலும் ஒவ்வொரு வருடத்திலும் இறுதி நிகழ்வுகளாக - ஏப்ரல் மாதத்தில் தொடர்ச்சியாக இரு நாள்கள் - ஆய்வரங்குகள், தொடர் பேச்சுக்கள், விஞ்ஞானக் கருத்தரங்குகள் என்பன நடத்தப்படுவதுடன் ஆய்வரங்குகளில தரப்படும் ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கம் புத்தக வடிவில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்றது. இந்த வகையில் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் 9ஆவது ஆண்டு நிகழ்வுகள் (**Annual Sessions**) நடைபெற இருக்கின்றன.

## 2000 - 2001 ஆண்டுக்குரிய கருப்பொருள்

இவ்வாண்டுக்குரிய கருப்பொருளாக '21ஆம் நூற்றாண்டில் அபிவிருத்தியிலுள்ள சவால்கள்' எனும் விடயம் சார்ந்த செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. வாழ்நாள் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம் என்னும் 66 வயதுடைய இளைஞனை தலைவராகக் கொண்டும் கலாநிதி ச.சிறீசற்குணராசா என்னும் ஆளுமையுடைய அனுபவசாலியை பொது செயலாளராகவும் கொண்டு இவ்வாண்டின் செயற்பாடுகள் பரந்துபட்ட அளவில் செயலாக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் என்னும் ஒருங்கிணைப்பாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற வட்டத்தினுள் மட்டும் தனியே மட்டுப்படுத்தப்பட்டுவிடாது யாழ்குடாநாட்டிலுள்ள அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள், பொதுமக்கள் என எல்லோரையும் ஒருங்கிணைக்கும் ஒரு நிறுவனமாகவே இவ் விஞ்ஞானச் சங்கம் இருந்து வருகின்றது. அதிலும் இவ்விஞ்ஞானச் சங்கத்தின் செயற்பாடுகள் எமது தாயகத்தின் அனைத்து மூலை முடுக்குகளையும் சென்றடைய வேண்டும் என்ற குறிக்கோளினை செயலாக்கும் நோக்கில் பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டி நிகழ்வுகளை வருடாவருடம் சங்கம் நடத்தி வருகின்றது.

## விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகள்

எம் இன மாணவர்களின் செயற்திறன், கண்டுபிடிப்புகள், நுண்ணறிவு, ஆர்வம், சாதனைகள், என்பனவற்றினை வெளிக்கொணரும் அதே நேரத்தில் ஏனைய மாணவர்கள் அதனை உள்வாங்கித் தமது விஞ்ஞான அறிவினை விருத்தி செய்ய உதவும் ஒரு செயல் வடிவமாகவே பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடம் வைத்திய கலாநிதி ந.சிவராஜா தலைமையில் இப் போட்டி நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இப் போட்டி நிகழ்ச்சிகளில் விஞ்ஞானக் கட்டுரைப் போட்டி, விஞ்ஞானப் பேச்சுப்போட்டி, விஞ்ஞான வினாவிடைப் போட்டி, விஞ்ஞான கண்காட்சிப்போட்டி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. விஞ்ஞான கட்டுரைப் போட்டியும் விஞ்ஞான வினாவிடை எழுத்துப் போட்டியும் 18.11.2000 அன்று நடத்தப்பட்டன. அதிக புள்ளிகள் பெற்ற முதல் 10 மாணவர்களுககான இறுதி வாய்மூலப் போட்டி 13.01.2001 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும். விஞ்ஞானப் பேச்சுப் போட்டி இன்று (11.01.2001) வியாழக்கிழமையும், இன்றைய தினத்திலிருந்து தொடர்ந்து மூன்று நாள்களுக்கு விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியும் நடைபெறவுள்ளன.

விஞ்ஞானப் பேச்சுப் போட்டியின் பொறுப்பாளராக பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் அவர்களும் விஞ்ஞானக் கட்டுரைப் போட்டியின் பொறுப்பாளராக கலாநிதி திருமதி சரமேஸ் அவர்களும் விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியின் பொறுப்பாளராக கலாநிதி. நா.சிவயோகன் அவர்களும் கடமையாற்றுகின்றார்கள். அனைத்து போட்டி நிகழ்வுகளும் பக்கச் சார்பில்லாது சரியான திறமையுள்ள மாணவர்களை தெரிவு செய்வதில் முக்கிய கவனமெடுக்கப்பட்டு ஒவ்வொரு போட்டி நிகழ்வு சார்ந்த விதிகளும், புள்ளியிடும் முறைகள் பற்றிய விளக்கங்களும் முன்கூட்டியே மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் தம்மை தயார்படுத்திக் கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

பல்கலையில் கல்விகற்கும் மாணவர்களின் முயற்சியினால் இம்முறை பல பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இப்போட்டி நிகழ்வுகளில் பங்குபற்றியுள்ளனர். குறிப்பாக மருத்துவபீட, விவசாயபீட மற்றும் விஞ்ஞானபீட மாணவர்களின் கைங்கரியத்தினால் இம்முயற்சி வெற்றியளித்துள்ளது. விஞ்ஞானக் கட்டுரைப் போட்டியில் 39 பாடசாலைகளிலிருந்து 221 மாணவர்களும் விஞ்ஞான வினாவிடை எழுத்துக் பரீட்சையில் 39 பாடசாலைகளிலிருந்து 201 மாணவர்களும் பங்குபற்றினர்.

விஞ்ஞானப் பேச்சுப் போட்டியில் 38 பாடசாலைகளிலிருந்து தலா ஒரு மாணவர் வீதம் பங்குபற்றவுள்ளனர். விஞ்ஞான கண்காட்சிப் போட்டியில் 30 பாடசாலைகளிலிருந்து 40க்கும் மேற்பட்ட காட்சிப் பொருள்கள் போட்டியில் பங்கு பற்றவுள்ளனர்.

இப்போட்டிகளுக்கான பரிசில்கள் "தினக்குரல்" பத்திரிகையின் அனுசரணையுடன் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவற்றுடன் இவ்வருடம் முதன் முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் குறிப்பிட்ட துறைகளைச் சார்ந்த காட்சிப் பொருள்களும் இடம் பெற இருப்பது விஞ்ஞான நிகழ்வுகளை மெருகூட்டுவதாக அமைகின்றது. இவ்வொழுங்கு யாழ்மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில் விஞ்ஞான போட்டி நிகழ்வுகள்

அனைவரினதும் ஏகோபித்த முடிவுக்கிணங்க பாடசாலைகளிலேயே அனைத்து விஞ்ஞானப் போட்டி நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன. அதன் பிரகாரம் கண்காட்சிப் போட்டிகள் 1999 இல் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் 2000இல் யாழ்.மத்திய கல்லூரியிலும் நடைபெற்றன. இவ்வருடம் யாழ். இந்துக் கல்லூரியில் விஞ்ஞான கண் காட்சிப்போட்டியும், பேச்சுப் போட்டியும், வாய்மூல வினாவிடைப் போட்டியும் நடைபெறவுள்ளன. இக் கல்லூரிகளில் இப்போட்டிகளை நடத்துவதற்கு உறுதுணை நல்கும் கல்விப் பணிப்பாளர்களையும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க வெளியீடுகள்

வருடா வருடம் நடைபெறும் ஆண்டு நிகழ்வுகளில் ஆய்வுக் கட்டுரைகளின் சுருக்கமும், தலைவர்களின் கருத்தரங்குகளும் நூல் வடிவில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. (முன்னைய வருடங்களில் விஞ்ஞான பதங்களுக்கான தமிழ் அகராதியும், சமூக விஞ்ஞானப் பகுதியின் நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.) இவை தவிர பிரயோக விஞ்ஞான பகுதியினரால் 1999ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞானச் சுடர் எனும் காலாண்டுச் சஞ்சிகை இம்முறையும் க.பொ.த உயர்தர மாணவர்களின் பாட அலகுகளைக் குறிப்பாக வைத்து வெளிவருகின்றன. விஞ்ஞான சுடர் 2உம், கதிர் 2உம் உங்கள் கைகளுக்குக் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

## ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களின் அறிவை வளர்த்தல்

(Knowledge base for **G.C.E. A/L** Students)

ஜீ.சீ.ஈ உயர்தர மாணவர்களின் பல்வேறு பாடங்களுக்கான நூல்கள் சிங்கள மொழியில் இலகுவாகக் கிடைப்பது போல தமிழ் மாணவர்களுக்கும் தமிழில் வெளியிட வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்க இந்நூல்கள் முதன் முதலாக யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினரால் வெளியிடப்படவிருக்கின்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனும் அனைவரையும் ஒன்றிணைக்கும் பாலமாகவும் இவர்கள் அனைவரதும் கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகவும், இந்நூல்கள் வெளிவரவிருக்கின்றன. இதற்கு மகுடம் வைத்தாற்போல முதல் 200 பக்கங்கள் கொண்ட நூலான கணிதபாடத்தில் அட்சரகணிதம் - 1 எனும் நூல் 11.1.2001 வியாழக்கிழமை நடைபெறும் விஞ்ஞானப்போட்டி நிகழ்வின் ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் உயர் திரு.அ.சிறிகுமரன் அவர்களால் வெளியிட்டு வைக்கப்படும். அட்சரகணிதம் - 1 நூலின் ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் மட்டுமல்லாது க.பொ.த.உயர்தர கணித் பரீட்சகர்களுமாவர். இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து நூல் வடிவில் வெளிக்கொணர்வதில் முழுமூச்சுடன் ஓய்வின்றி உழைக்கும் க.பொ.த. உயர்தர கணித பரீட்சகரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய கலாநிதி க.ஸ்ரீசற்குணராசா அவர்களை தமிழ்க் கல்விச் சமூகம் என்றும் நினைவில் நிறுத்திக்கொள்ளும். இதன் தொடராக வாழ்நாள் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் உயிரியல் பாடத்திற்கான மூலக்கூற்று உயிரியல் - 1 நூலின் இறுதி வடிவமும் பெறப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் மாதங்களில் ஏனைய பாடங்களுக்கான நூல்கள் வெளிவரவிருக்கின்றன என்ற நற் செய்தியையும் தெரிவிப்பதில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் மனம் மகிழ்வுறுகின்றது. இந்நூல்கள் பேதமேதும் இன்றி அனைத்து மாணவர்களின் கைகளிலும் தவழ வேண்டும் என்ற குறிக்கோளில் இவற்றின் விலைகள் வெளியீட்டுக்குரிய செலவுடன் எம் மின மாணவர்களின் கைகளில் தவழ இருக்கின்றன. இவ்வகை நூல்களின் வெளியீடு புதிய நூற்றாண்டின் வரவை எதிர் நோக்கும் தமிழ் மாணவ சமூகத்திற்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் நன்கொடையுமாகும்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் செயற்பாடுகளில் உதயன், வலம்புரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளின் பங்கு அளப்பரியது.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வேண்டுகோள்

எம் தமிழ் மாணவர்களின் அறிவுத் தேடலுக்குக் கைகொடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ள இவ்வேளையில் இவ் விஞ்ஞான சங்கத்தில் தகுதியுடைய அனைவரையும் இணைத்துக் கொள்ளுமாறு விநயத்துடன் வேண்டுகோள் விடுக்கின்றோம். யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புத்திஜீவிகளின் சொத்து என்ற நிலையை முற்று முழுதாக அகற்றத் தகுதியுடைய அனைத்து பொதுமக்களையும் அறிஞர் பெருமக்களையும் இப்புதிய ஆண்டில் இருகரம் கொண்டு வரவேற்கின்றோம். மேலும் தனித்துவமான பணியகமொன்றின் தேவை தற்போது அனைவராலும் உணரப்பட்டுள்ள நிலையில் இச்சங்கத்திற்கான நிலம் மற்றும் கட்டட வசதிகளை தேவை உணர்ந்து தாராள மனம் படைத்த கொடைவள்ளல்களிடமிருந்து யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் கையேந்தி நிற்கின்றது. வாருங்கள்; இணையுங்கள்! எம் இனத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்குமான அத்திவாரத்தைக் கட்டியெழுப்ப வாரீர்!

★☆★☆★☆

**குணசிங்கம் மிகுந்தன்**
உதவிப் பொதுச்செயலாளர்
யாழ்ப்பாண
விஞ்ஞானச் சங்கம்.



உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவர்களின் 'உதய நிலா' சஞ்சிகை வெளியீட்டு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் அந் நிகழ்வில் வாழ்த்துரை வழங்கினார். அச்சமயம் எடுக்கப்பட்ட படம் இது.

அதிபர் கவிமணி க.ஆனந்தராசாவும் ஆய்வுரை நிகழ்த்திய ஆசிரியமணி அ.பஞ்சாட்சரமும் படத்தில் உள்ளனர். (ஐ)



தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அறநிதிய சபையின் அனுசரணையுடன் இணுவில், மானிப்பாய் வட்டம், சுன்னாகம் லயன்ஸ் கழகங்கள் இணைந்து இணுவில் மத்திய கல்லூரியில் இலவச கண் பரிசோதனை முகாமை நடத்தின.

யாழ்.போதனா வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாஸன் சிகிச்சைகளை மேற்கொண்டார். அச் சமயம் எடுக்கப்பட்ட படம் இது.

லயன்ஸ் கழகங்களின் மாவட்டத் தலைவர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, மூத்த பத்திரிகையாளர் செல்லப்பா நடராஜா, வைத்திய கலாநிதி லயன் க.சிவராசா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இடம் மாற்றம்

நாவலடிச் சந்தி, அல்வாய் வடக்கில் இயங்கி வந்த கமலக் கண்ணன் திருமண சேவை தற்சமயம் வியாபாரி மூலைச் சந்தி, வியாபாரிமூலை என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது. மற்றும் சகல மதத்தவரின் தகுதிகளுக்கேற்ப மணமகன், மணமகள் உண்டு. தொடர்பு: ஆ.செல்வவிநாயகம் C/o பொ.மோகன் (காப்புறுதி முகவர்) வியாபாரிமூலைச் சந்தி, வியாபாரிமூலை. (82733)

### புறொயிலர் இறைச்சிக்கோழி

கொழும்பிலிருந்து விமானம் மூலம் தினமும் இறக்குமதி செய்யப்படும் வயிராபாம் இறைச்சிக் கோழி மற்றும் கீல்ஸ் வகை, சொயன்சீயஸ் என்பன சுத்தம்செய்து தினமும் விற்பனைக்கு உண்டு. காலை 6 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: T.கரன், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் சந்திக் கடை, யாழ்ப்பாணம். (82756)

### தரம் II

வணிகக் கல்வியும் கணக்கீடும் யாழ்.நகரின் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். தேசிய கல்வி நிறுவன பாடத்திட்ட விரிவாக்கம். ஆசிரியர்:- இ.இரட்ணம்.(82729)

### ஆங்கில வகுப்பு

சுலபமான முறையில் ஆங்கிலத்தில்: கதைக்க, எழுத, வாசிக்க, இலக்கணம் பயில, தபால் மூலமும் பயிற்சி. ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, நாகலிங்கம் சுவாமிகள் வீதி, சங்கானை, 426,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (82785)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

இரண்டு பேருக்கு சமையல் வேலைக்கான வீட்டுப் பணிப்பெண் தேவை. தொடர்பு: Dr.நா.இராசதுரை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (82791)

### A/L பௌதிகவியல்

பல வருட அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் பௌதிகவியல், இணைந்த கணிதம் ஏராளமான பயிற்சிகளுடன் குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 3 மணிக்குப் பின்பு R.பாலசுப்பிரமணியம் B.Sc (Cey) Dip.in.Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (82788)

### தவறிவிட்டது

காரைநகரைச் சேர்ந்த தனபாலன் சுதா என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல.091304559) 03-01-2001 அன்று வேம்படி மகளிர் கல்லூரிக்கும் சீனிவாசகம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.15A, சீனிவாசகம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைககவும். (82797)

### தொலைபேசி தேவை

ரெலிகொம் தொலைபேசி இணைப்பு வைத்திருப்போர் உரிமை மாற்றம் செய்து விற்க விரும்பின் உடன் தொடர்பு கொள்க. விளம்பர இலக்கம் 1177, மே/பா உதயன். (82802)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா இன சிகப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும் புறொயிலர் குஞ்சுகளும் முன்கூட்டியே பதிந்தவர்கள் தொடர்பு கொண்ட பின் வந்து பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: வி. குணபாகன், 343 K.K.S வீதி, யாழ்ப்பாணம். T.P.3353, வி.குணபாகன் 609K.K.S வீதி, நாச்சிமார் கோயிலடி. (82806)

### விற்பனைக்கு

SONY T.V 2090, 2068 (COLOUR, டபிள் ஸ்பீக்கர் றிமோட் கொன்றோல்) 12" கறுப்பு வெள்ளை மற்றும் GOLDSTAR கறுப்பு வெள்ளை முதலிய T.V க்கள விற்பனைக்குண்டு. தொடர்பு: N.T. ராஜன், 140, K.K.S வீதி, (சத்திரத்துச்சந்தி முன்பாக), யாழ்ப்பாணம். (82710)


# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜன.11

இம்மாதம் 10ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(177093ஏ) (177229ஏ) (169982ஏ)
(170279ஏ) (170411ஏ) (175085ஏ)
(175732ஏ) (175732பி) (175732சி)
(175732டி) (175732ஈ) (175732எவ்)
(176704ஏ) (176856ஏ) (176856பி)
(176947ஏ) (176947பி) (176979ஏ)
(178561ஏ) (178929ஏ) (178929பி)
(178929சி) (178949ஏ)

### சாவகச்சேரி

(146067ஏ) (146067பி) (146067சி)
(146067டி) (168070ஏ) (168070பி)
(168070சி) (168070டி) (168070ஈ)
(172529ஏ) (172529பி) (172529சி)
(174481ஏ) (174591ஏ)

### யாழ்ப்பாணம்

(170989ஏ)

### கரவெட்டி

(135075ஏ) (142312ஏ) (142312பி)
(142312சி) (142312டி) (142504ஏ)
(145847ஏ) (146832ஏ) (146832பி)
(146832சி) (146832டி) (150911ஏ)
(151037ஏ) (151037பி) (151037சி)
(151099ஏ) (151099பி) (151604ஏ)
(151604பி) (151644ஏ) (151704ஏ)
(151704பி) (154812ஏ) (154812பி)
(154859ஏ) (154859பி) (154997ஏ)
(154997பி) (155052ஏ) (155052பி)
(155639ஏ) (155639பி) (155639சி)
(155639டி) (155723ஏ) (155852ஏ)
(155969ஏ) (155969பி) (155969சி)
(155974ஏ) (155974பி) (155974சி)
(156141ஏ) (158000ஏ) (158000பி)
(158000சி) (158000டி) (158000ஈ)
(158068ஏ) (160274ஏ) (162068ஏ)
(162068பி) (162170ஏ) (162278ஏ)
(162278பி) (162278சி) (164388ஏ)
(164388பி) (164388சி) (164388டி)
(164540ஏ) (164590ஏ) (164634ஏ)
(164634பி) (164676ஏ) (164676பி)
(164734ஏ) (164734பி) (164734சி)
(164734டி) (164770ஏ) (164770பி)
(164823ஏ) (164839ஏ) (164839பி)
(165347ஏ) (165347பி) (165347சி)
(165352ஏ) (165411ஏ) (165411பி)
(165411சி) (165411டி) (167158ஏ)
(167158பி) (167158சி) (167158டி)
(167352ஏ) (167357ஏ) (157480ஏ)
(167480பி) (167480சி) (167869ஏ)
(167884ஏ) (167884பி) (167915ஏ)
(167990ஏ) (167990பி) (167990சி)
(167990டி) (167990ஈ) (167999ஏ)
(167999பி) (167999சி) (167999டி)
(168095ஏ) (168095பி) (168147ஏ)
(168147பி) (168147சி) (169441ஏ)
(169441பி) (169441சி) (169707ஏ)
(169707பி) (169707சி) (169752ஏ)
(169813ஏ) (169813பி) (169813சி)
(169813டி) (169836ஏ) (169848ஏ)
(169900ஏ) (169900பி) (169900சி)
(169903ஏ) (169903பி) (169903சி)
(172282ஏ) (172282பி) (172282சி)
(172282டி) (172295ஏ) (172295பி)
(172337ஏ) (172337பி) (172337சி)
(172337டி) (172390ஏ) (172466ஏ)
(172467ஏ) (172469ஏ) (172470ஏ)
(172486ஏ) (172486பி) (172486சி)
(172486டி) (172486ஈ) (172486எவ்)
(172486ஜி) (172508ஏ) (172508பி)
(172508சி) (172508டி) (172532ஏ)
(172547ஏ) (172547பி) (172601ஏ)
(172623ஏ) (172623பி) (174291ஏ)
(174314ஏ) (174381ஏ) (174381பி)
(174404ஏ) (174404பி) (174443ஏ)
(174443பி) (174443சி) (174448ஏ)
(174448பி) (174448சி) (174461ஏ)
(174461பி) (174466ஏ) (174466பி)
(174510ஏ) (174510பி) (174526ஏ)
(174526பி) (174574ஏ) (174574பி)
(174574சி) (174673ஏ) (176080ஏ)
(176080பி) (176089ஏ) (176089பி)
(176089சி) (176089டி) (176089ஈ)
(176089எவ்) (176104ஏ) (176104பி)
(176104சி) (176104டி) (176141ஏ)
(176183ஏ) (176183பி) (176214ஏ)
(176280ஏ) (176284ஏ) (176284பி)
(176284சி) (176310ஏ) (1772492ஏ)

### கோப்பாய்

(166968ஏ) (166980ஏ) (166997ஏ)
(166997பி) (166997சி) (166997டி)
(167008ஏ) (167008பி) (168218ஏ)
(168218பி) (168418ஏ) (168418பி)
(170455ஏ) (170455பி) (170478ஏ)
(170478பி) (170478சி) (170516ஏ)
(170516பி) (170516சி) (170516டி)
(170588ஏ) (170588பி) (171282ஏ)
(171282பி) (171282சி) (173207ஏ)
(173207பி) (173276ஏ) (173309ஏ)
(173309பி) (173318ஏ) (173338ஏ)
(173924ஏ) (173924பி) (173941ஏ)
(173941பி) (174005ஏ) (174016ஏ)
(174087ஏ) (174119ஏ) (174119பி)
(174124ஏ) (174124பி) (177049ஏ)
(177074ஏ) (177074பி) (177080ஏ)
(177080பி) (177080சி) (177085ஏ)
(177090ஏ) (177239ஏ) (177250ஏ)
(177390ஏ)

### மருதங்கேணி

(167985ஏ) (167985பி) (169816ஏ)
(174583ஏ)

### நல்லூர்

(156752ஏ) (162873ஏ) (162873பி)
(162875ஏ) (162875பி) (162875சி)
(167743ஏ) (167743பி) (170671ஏ)
(170956ஏ) (171275ஏ) (171280ஏ)
(171576ஏ) (174085ஏ) (174085பி)
(174125ஏ) (174125பி) (174125சி)
(174134ஏ) (174190ஏ) (174190பி)
(177047ஏ) (177102ஏ) (177102பி)
(177247ஏ) (177247பி) (168973ஏ)
(168973பி) (168973சி) (176550ஏ)
(176701ஏ) (176701பி) (176852ஏ)
(176941ஏ) (176953ஏ) (176953பி)
(176961ஏ) (178532ஏ) (178562ஏ)
(178645ஏ) (178939ஏ) (178943ஏ)
(178943பி)

### பருத்தித்துறை

(170985ஏ) (125802ஏ) (138018ஏ)
(143720ஏ) (151120ஏ) (154665ஏ)
(154773ஏ) (154773பி) (154773சி)
(154773டி) (154773ஈ) (155705ஏ)
(155705பி) (155705சி) (155705டி)
(155705ஈ) (155732ஏ) (155732பி)
(155732சி) (155845ஏ) (155845பி)
(155845சி) (155845டி) (158209ஏ)
(158209பி) (158209சி) (158368ஏ)
(160007ஏ) (162073ஏ) (162073பி)
(162073சி) (164404ஏ) (164485ஏ)
(164495ஏ) (164513ஏ) (164513பி)
(164513சி) (164513டி) (164566ஏ)
(164566பி) (164766ஏ) (164766பி)
(165425ஏ) (165425பி) (165425சி)
(167156ஏ) (167156பி) (167156சி)
(167213ஏ) (167259ஏ) (167311ஏ)
(167311பி) (167333ஏ) (167333பி)
(167935ஏ) (168105ஏ) (168105பி)
(168105சி) (168105டி) (168105ஈ)
(168105எவ்) (169479ஏ) (169479பி)
(169559ஏ) (169559பி) (169644ஏ)
(169695ஏ) (169695பி) (169695சி)
(169695டி) (169695ஈ) (169792ஏ)
(169811ஏ) (169812ஏ) (169831ஏ)
(169835ஏ) (169835பி) (169881ஏ)
(172297ஏ) (172308ஏ) (172379ஏ)
(172463ஏ) (172474ஏ) (172474பி)
(172474சி) (172618ஏ) (174295ஏ)
(174295பி) (174320ஏ) (174354ஏ)
(174364ஏ) (174364ஏ) (174393ஏ)
(174407ஏ) (174436ஏ) (174445ஏ)
(174472ஏ) (176053ஏ) (176053பி)
(176137ஏ) (176137பி) (176211ஏ)
(176211பி) (176244ஏ) (176294ஏ)
(176378ஏ)

### சண்டிலிப்பாய்

(165769ஏ) (165769பி) (166906ஏ)
(166906பி) (174811ஏ) (174811பி)
(175190ஏ) (175190பி) (175191ஏ)
(176562ஏ) (176630ஏ) (176664ஏ)
(176664பி) (176750ஏ) (176750பி)
(176863ஏ) (176863பி) (176863சி)
(176863டி) (176878ஏ) (176894ஏ)
(176894பி) (176912ஏ) (176940ஏ)
(176940பி) (176964ஏ) (176990ஏ)
(176990பி) (178514ஏ) (178548ஏ)
(178565ஏ) (178568ஏ) (178933ஏ)
(178937ஏ) (178937பி) (178937சி)
(178944ஏ) (178978ஏ) (178978பி)
(178978சி) (178993ஏ)

### தெல்லிப்பழை

(146325ஏ) (176603ஏ) (176779ஏ)
(176779பி) (176952ஏ)

### உடுவில்

(167616ஏ) (174009ஏ) (174055ஏ)
(174080ஏ) (174096ஏ) (174096பி)
(174096சி) (174097ஏ) (177022ஏ)
(177022பி) (177058ஏ) (177058பி)
(177058சி) (177063ஏ) (177063பி)
(177088ஏ) (177212ஏ) (177240ஏ)
(177240பி) (177244ஏ) (177244பி)
(161725ஏ) (161725பி) (168956ஏ)
(170373ஏ) (174970ஏ) (174971ஏ)
(174971பி) (176517ஏ) (176571ஏ)
(176571பி) (176571சி) (176633ஏ)
(176688ஏ) (176700ஏ) (176824ஏ)
(176824பி) (176824சி) (176824டி)
(176844ஏ) (176844பி) (176844சி)
(176853ஏ) (176853பி) (176853சி)
(176854ஏ) (176966ஏ) (178521ஏ)
(178521பி) (178521சி) (178521டி)
(178521ஈ) (178563ஏ) (178563பி)
(178584ஏ) (178584பி) (178584சி)
(178931ஏ) (178932ஏ) (178932பி)
(178958ஏ) (178958பி) (178976ஏ).

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையில்

# நடுக்கடலில் படகோட்டி பயணியால் தாக்கப்பட்டார்.

நெடுந்தீவுக்கான படகுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் படகின் ஓட்டி நடுக்கடலில் வைத்து பயணி ஒருவரால் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கள் அன்று இடம்பெற்றுள்ளது.

குறிகாட்டுவானில் இருந்து 54 பயணிகளுடன் நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்ட- நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான- படகைச் செலுத்திய மரியநாயகம் என்பவரே மீன் வியாபாரியான ஒருவரால் அடித்துத் தாக்கப்பட்டார். சுக்கான் தடியும் பறித்து எறியப்பட்டது.

பிற்பகல் மூன்று மணிக்கு துறையிலிருந்து படகு புறப்பட்டு சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் சென்ற சமயம் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தினால் படகில் இருந்த பயணிகளும் கதிகலங்கிப் போயினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கடந்த நவம்பர் 14ஆம் திகதியும் இதே நபர், இதேபோன்ற அடாவடித்தனத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட நபர் ஒரு மீன் வியாபாரி என்றும்-

அவரது ஆள்கள் எடுத்துவரும் மீனையும் ஏற்றி வருவதற்காகக் காலையில் நெடுந்தீவில் இருந்து வழமையாக படகு புறப்படும் ஏழு மணி நேரத்தைத் தாண்டிய பின்னும படகைத் தாமதிப்பதற்கு சம்பந்தப்பட்ட படகோட்டி இணங்க மறுத்தார் என்றும் -

அதற்காகவே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பயணி ஒருவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட மீன் வியாபாரி தமது அரசியல் செல்வாக்கைப் பின்னணியாக வைத்துக் கொண்டு இத்தகைய அடாவடித்தனங்களைப் புரிவதால் பொதுமக்கள் வாய்மூடி மௌனியாகப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியிருப்பதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(உ)

# அபிவிருத்தி நடவடிக்கைகளில் நெடுந்தீவு மேற்கு புறக்கணிப்பு

## அப்பகுதி மக்கள் முறைப்பாடு

நெடுந்தீவு,ஜன.11

நெடுந்தீவு அபிவிருத்தி நடவடிக்கைகளில் நெடுந்தீவு மேற்குப்பிரதேசம் திட்டமிட்டு ஒதுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் சாரபில் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகவும் - தமக்குள்ள குறைபாடுகள் குறித்தும் - நெடுந்தீவு மேற்குப் பிரதேச மக்கள் ஈ.பி.டி.பி செயலர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை சில தினங்களுக்கு முன்னர் நேரில் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

மின்விநியோகம், வீதி அமைப்பு, க்கட்டடங்கள் புனரமைப்பு, குடிதண்ணீர் வசதியளித்தல், தொலைபேசி இணைப்பு வழங்கல், வைத்திய சேவை, புதிய அரச - பொது ஸ்தாபனக்கட்டடங்களை அமைத்தல் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளில் தமது பிரதேசம் ஒதுக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் குறை கூறுகின்றனர்.

இது தொடர்பான தமது ஆட்சேபத்தைப் பகிரங்கப்படுத்துவதற்காக நெடுந்தீவு மேற்குப் பிரதேச மக்கள் கடந்த வாரம் அங்கு ஊர்வலம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டனராயினும், அரசியல் கட்சி ஒன்றின் பிரமுகர்கள் சிலர் தலையிட்டதை அடுத்து ஊர்வலம் நடத்தும் திட்டம் இடைநிறுத்தப்பட்டதாகவும் அறிய வந்தது.

(உ)

## இடமாற்ற சபைக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.11

வலயமட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றச்சபையின் கூட்டம் எதிர் வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மேலதிக கல்விப்பணிப்பாளர் ச.நா.தணிகாசலம்பிள்ளை தலைமையில் மேலதிக மாகாண கல்விப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் இ.சிவானந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் 5 வலயக்கல்விப் பணிப்பாளர்களும் 3 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-10)


## முதலாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

மலர்வு 14 - 06 - 1926



உதிர்வு 11 - 01 - 2000

### அமரர் கணபதிப்பிள்ளை இராசதுரை

(ஓய்வுபெற்ற குடிவரவு, குடியகல்வு உதவிக்கட்டுப்பாட்டாளர்)

திதி: துதியை - நட்சத்திரம் பூசம்

11-01-2001

அன்புள்ளம் கொண்ட அண்ணா!
குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம்மை கடமை, கட்டுப்பாடாய், பாசமாய் வளர்த்து
ஆறாத்துயரில் விட்டுப் பிரிந்து ஆண்டொன்று மறைந்ததையா!
உங்கள் நினைவு எம்மை விட்டுப் பிரியாதண்ணா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக மானிப்பாய் மருதடி
விநாயகனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வி க.தவமணி
(சகோதரி)
ஆஸ்பத்திரி ஒழுங்கை,
மானிப்பாய்.

- குடும்பத்தினர்.

(82809)

### சமாதானத் தீர்வு காண்பதற்கு நியமிக்கப்பட்ட

# கிளின்ரனின் விசேட தூதர் மேற்காசியா சென்றார்

வாஷிங்ரன், ஜன, 11

மேற்காசியப் பிரச்சினை தொடர்பாக அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் நியமித்துள்ள விசேட தூதர் டெனிஸ் லொஸ் நேற்று மத்திய கிழக்குக்குச் சென்றார்.

இவர் இஸ்ரேலியப்பிரதமர் எகுட் பராக் மற்றும் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் ஆகியோருடன் தனித்தனியே பேச்சு நடத்துவார்.

இறுதிச் சமாதான ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து அதிபர் கிளின்ரன் இரு தரப்பினரிடமும் கடந்த மாதம் கையளித்த பரிந்துரைகள் தொடர்பான சந்தேகங்களுக்கு பராக் மற்றும் அரபாத்திடம்டெனிஸ்லொஸ் விளக்கமளிக்க உள்ளார்.

பலஸ்தீனர்களின் சுயாட்சி உரிமை, ஜெருசலேமில் இருந்து வெளியேறிய பலஸ்தீன அகதிகளின் நிலை, ஜெருசலேமின் அதிகார நிர்வாகம் இரு நாடுகளுக்கிடையேயான எல்லை ஆகிய இடங்களில் பலஸ்தீனரும், இஸ்ரேலியரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க மறுத்து வருவதால் விசேட தூதரின் முயற்சி எதிர்பார்த்த பலனை அளிக்கப்போவதில்லை என்றே கருதப்படுகிறது

இதற்கிடையில், பெத்லகேமில் பலஸ்தீனர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது இஸ்ரேலியப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படுகிறது.

மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இஸ்ரேலியப் படையினருடன் நடந்து வரும் மோதல்களை மக்கள் கிளர்ச்சி என்று பலஸ்தீன அதிகாரி ஒருவர் வர்ணித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் தொடங்கிய இந்த மோதல்களில் 338 பலஸ்தீனர்களும் 43 இஸ்ரேலியர்களும் உயிரிழந்துள்ளனர்.

# கொலைக் குற்றவாளி தாக்கி பெண் நீதிவான் படுகாயம்!

## பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் சம்பவம்

லண்டன், ஜன. 11

பிரிட்டிஷ் நீதிமன்றம் ஒன்றில் கொலை வழக்கு ஒன்றை விசாரித்துக் கொண்டிருந்த பெண் நீதிவான் குற்றஞ்சாட்டப்பட்டவரின் தாக்குதலுக்கு உள்ளாகி மயக்கமானார்.

பிரிட்டனில் புகழ் மிக்க பல முக்கிய வழக்குகள் நடந்த 'ஓல்ட் பெய்லி' நீதிமன்றத்திலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

மனைவியை வாளால் வெட்டிக் கொன்றதாக கணவன் மீது குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன

64 வயதான பெண் நீதிவான் கொடார்ட் வழக்கை விசாரித்தார்.

திடீரென்று குற்றவாளிக் கூண்டில் இருந்து நீதிவானை நோக்கிப் பாய்ந்த குற்றஞ்சாட்டப்பட்டவர், அங்கு வைக்கப்பட்டிருந்த நீர் நிறைந்த பாத்திரத்தை எடுத்து நீதிவானை நோக்கி வீசினார்.

அது படாததால் நீதிவான் அமர்ந்திருந்த பீடத்தின் மீது பாய்ந்து ஏறிய எதிரி நீதிவானின் முகத்தில் சரமாரியாகக் குத்தினார்.

இதனால் இரத்தக் காயமடைந்த நீதிவான் மயங்கி விழுந்தார்.

அந்தச் சமயத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் எதிரியை மடக்கிப் பிடித்ததால் நீதிவான் உயிர் தப்பியதாகவும் கூறப்படுகின்றது. (ஒ-6)

# சவூதியில் சகாவைக் கொன்ற இலங்கையருக்குச் சிரச் சேதம்

சவூதி அரேபியாவில் இலங்கையர் ஒருவருக்கு சிரச்சேதத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தலைநருக்கு வடக்கே காசிப் என்ற நகரில் தன்னுடைய அறையில் தங்கியிருந்த மற்றொரு இலங்கையரை அவர் தூங்கிக் கொண்டிருந்த போது இரும்புக்கம்பியால் அடித்துக் கொன்ற குற்றத்துக்காகவே குறிப்பிட்ட இலங்கையருக்குத் தலையை வாளினால் வெட்டித்துண்டித்துத் தண்டனை வழங்கப்பட்டது.

இந்தவருடத்தில் இதுவரை 5 மரண தண்டனைகளும், கடந்த ஆண்டில் 113 மரண தண்டனைகளும் சவூதிஅரேபியாவில் நிறைவேற்றப்பட்டன.

இஸ்லாமிய ஷரி–அத் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நாடுகளில் ஒன்றான சவூதி அரேபியாவில் படுகொலை, பாலியல் வல்லுறவு, ஆயுதம் தாங்கி கொள்ளையிடுதல், போதைப் பொருள் கடத்தல் ஆகிய குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. (ஒ-6)

# இந்தியாவில் குடியரசு தினத்தை சீர்குலைக்கும் முயற்சி முறியடிப்பு!

## 6 முக்கிய தீவிரவாதிகள் கைது!

உலக அரங்கில்

புதுடில்லி, ஜன. 11

இந்தியாவில் குடியரசுதினக் கொண்டாட்டங்களைச் சீர்குலைக்க சதித்திட்டம் தீட்டிய 6 முக்கிய தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக காஷ்மீர் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள குடியரசுத் தின விழாக்களின் போது வன்முறைத் தாக்குதல்களை நடத்தவும் —

முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரைக்கொல்லவும் திட்டம் தீட்டியிருந்த தீவிரவாதிகளே கைதாகியுள்ளனர்.

பாகிஸ்தானில் தலைமையகத்தைக் கொண்டிருக்கும் ஜமாதுல் முஜாஹிதீன் என்ற காஷ்மீர்த் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 4 முக்கிய தலைவர்களை முதலில் ஸ்ரீ நகரில் காஷ்மீர் பொலீஸார் கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணைகளை அடுத்து கொல்கத்தாவில் மற்றைய இரு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்,

கைது செய்யப்பட்டவர்களுக்கும், பாகிஸ்தான் ஆதரவு பெற்ற மற்றொரு தீவிரவாத இயக்கமான லங்கர்—இ—தொய்பா அமைப்பினருக்கும் இடையே தகவல் பரிமாற்றங்கள் நிகழ்ந்திருப்பதைக் கண்டுபிடித்துள்ளதாகக் கூறிய பொலீஸ் அதிகாரி ஒருவர் இரு அமைப்புகளும் சேர்ந்து இந்தியக் குடியரசு தினத்தன்று பல்வேறு இடங்களில் சதிச்செயல்களை நடத்தத்திட்டமிட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதால் பாரிய உயிரிழப்புகளும், சேதங்களும் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ஒ)

# பயணிகள் ரயில் தடம் புரண்டதில் பாகிஸ்தானில் 8 பேர் மரணம்

பாகிஸ்தானில் பயணிகள் ரயில் ஒன்று தடம்புரண்டதில் 8 பேர் உயிரிழந்தனர். 70 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

கராச்சியில் இருந்து சென்ற விரைவு ரயில் வடக்கே 100 கிலோமீட்டர் தொலைவில் தடம் புரண்டது.

இதனால் ரயில்பெட்டிகள் ஒன்றின் மீது மற்றொன்று மோதி நொறுங்கி உருக்குலைந்தன.

சாதாரண வகுப்புப் பெட்டிகளில் பயணிகள் அதிகம் இருந்ததாகவும்— அந்தப் பெட்டிகளே அதிகம் சேதமடைந்துள்ளதாகவும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை விபத்தில் பலியானவர்களில் 8 பேரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மோசமாக உருக்குலைந்துள்ள 3 ரயில் பெட்டிகளுக்குள் மேலும் பலர் சிக்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# எவரெஸ்ட் சிகரத்தின் மீது உல்லாச விடுதி உருவாகிறது

உலகின் அதி உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் தங்கும் விடுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நியூஸிலாந்தில் பிறந்த மலை ஏற்ற வீரர் ரிசல் பிரைட் என்பவரே விடுதி அமைக்க அனுமதி பெற்றுள்ளார்.

சுமார் 23 லட்சம் பிரிட்டிஷ் பவுண்ட்ஸ் செலவில் அமைக்கப்படவுள்ள இந்த விடுதியில் சகல வசதிகளுமுடைய 52 படுக்கையறைகள் இருக்கும்.

எவரெஸ்ட் சிகரத்தில் திபெத் பகுதியில் உள்ள வடக்கு அடிமட்ட முகாமில் ராம்புக் பள்ளத்தாக்கு அருகே இந்த விடுதி கட்டப்படவுள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 17 ஆயிரம் அடி உயரத்தில் உருவாக்கப்பட உள்ள மேற்படி தங்கும் விடுதி இளையதலைமுறையினரை குறிப்பாக இளம் ஜோடிகளைக் கவரும் என்று நம்பப்படுகிறது.

### படத்தயாரிப்பாளர் கைதை எதிர்த்து

# மும்பையில் வைர வியாபாரிகள் வேலை நிறுத்தப் போராட்டம்

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தின் மும்பை நகரில் வைர வியாபாரிகள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினர்.

பிரபல வைர வியாபாரியான பரத்ஷா பொலீஸாரால் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப்போராட்டம் நடைபெற்றது.

இந்தித் திரைப்படங்கள் யதாரிக்க பண உதவிகள் செய்து வந்த பரத்ஷாவுக்கு தலைமறைவுப் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்பிருப்பதாகக் கூறியே பொலீஸார் அவரைக் கைது செய்தனர்.

தமது குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் முக்கிய ஆவணங்கள் பரத்ஷாவின் அலுவலகம் மற்றும் இல்லத்தில் நடத்தப்பட்ட சோதனைகளில் கைப்பற்றப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த சில வருடங்களாக இந்தித் திரையுலகில் பாதாள உலகக் கோஷ்டிகளின் ஆதிக்கம் அதிகரித்து வந்ததாக முறைப்பாடுகள் எழுந்தது.

தாவுத்இப்ராகிம், சோட்டா ராஜன் உட்பட வெளிநாடுகளில் இருந்து இந்தியாவில் தத்தமது கோஷ்டிகள் மூலம் குற்றச்செயல்களைப் புரிபவர்களின்பணம்பரத்ஷாபோன்றவர்களின்மூலமாகபடத்தயாரிப்புக்களில் முதலிடப்படுவதாகவும் கூறப்பட்டுவந்தது.

வெளிநாடுகளுக்குக் கலைவிழா நடத்தச் செல்லும் நடிகைகளும், நடிகர்களும் பாதாள உலகக் கும்பல்கள் நடத்தும் விருந்துகளில் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படங்களும்பத்திரிகைகளில் பிரசுரமாகின.

பாதாள உலகக் கும்பல்கள் சம்பந்தப்பட்ட திரைப்படங்களில் 'இந்தியாவின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் ஊறுவிளைவிக்கும் கருத்துகள்பரப்பப்பட்டு வந்ததாக குற்றச் சாட்டுகள் எழுந்தன.

இவற்றை அடுத்தே பொலீஸார் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

# இலங்கைக் கடற்படை சுட்டு தமிழக மீனவர் படுகாயம்!

சென்னை, ஜன. 11

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்துள்ளார்.

சஹராப் பட்டணத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் புதுக்கோட்டை கரைக்கும் அப்பால் இந்தியக்கடல் எல்லைக்குள் நேற்று முன்தினம் அதிகாலை மீன் பிடித்துக் கொண்டிருந்தனராம்.

அப்போது அங்கு ரோந்துப் படகில் வந்த இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களின் படகை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கிகளால் சுட்டதாகக் கூறப்படுகிறது.

இதில் ஒரு மீனவர் படுகாயமடைந்ததாகவும், படகு சேதமடைந்துள்ளதாகவும் தமிழக மீன் வளத்துறை அமைச்சர் ஜெனிபர் சந்திரனிடம் சஹராப் பட்டணம் மீனவர் சங்கத்தினர் முறையிட்டுள்ளனர்.

# படகுகளில் சென்ற 84 பேர் ஆஸ்திரேலியாவில் காவலில்

ஆஸ்திரேலியாவில் சட்ட விரோதமாகத் தரையிறங்கிய 84 பேரை குடிவரவுத்துறை அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மீன்பிடிப் படகு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி, ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயற்சித்ததாகவும் —

படகோட்டிகள் இவர்களை ஆஸ்திரேலியாவில் கிறிஸ்மஸ்தீவில் தரையிறக்கி விட்டுச் சென்றதாகவும் — அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 84 பேரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது கூறப்படவில்லை.

கடந்த 10 வாரங்களுக்குள் சுமார் 800 பேர் அகதி அந்தஸ்துக் கோரி ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் கடந்த ஒரு வருடத்தில் 4 ஆயிரம் சட்ட விரோதக் குடியேற்றவாசிகள் நுழைந்துள்ளனர்.

# பிரிட்டனில் இன வாதம்

பிரிட்டிஷ் பொலீஸ் துறையில் இன வாதம் வேரூன்றிப் போய் விட்டதாக லண்டன் பி. பி. சி சேவையின் தலைவர் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பி. பி. சியில் வெள்ளையர் ஆதிக்கம் அதிகம் உள்ளதாகவும் அங்கும் இனவாதம் தலை தூக்கியுள்ளதாகவும் அவர் பேட்டியில் ஒப்புக்கொண்டுள்ளார். (ஒ-6)

# வாஜ்பாய்ஜகார்த்தா சென்றார்

வியட்நாமில் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் நேற்று இந்தோனேசியா தலைநகர் ஜகார்த்தாவைச் சென்றடைந்தார்.

கடந்த 14 ஆண்டுகளில் இந்தோனேசியா செல்லும் முதல் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலய திருத்த வேலைகளுக்கு பன்முகப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ரூபா 200,000 நிதி உதவி வழங்கிய

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சருமாகிய

**கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா**

மற்றும்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

**திரு. வி. கே. குகேந்திரன் (ஜெகன்)**

மற்றும்

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பி. வட்டுக்கோட்டை அமைப்பாளருமான

**திரு. ந. திரிலோகநாதன்**

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்

(82816)


## மரண அறிவித்தல்கள்

### பூலோகசுந்தரம் வைத்தியநாதன்

(ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு இயக்குநர், இலங்கைத் தரைப்படை)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், செருக்கப்புலம் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட பூலோகசுந்தரம் வைத்தியநாதன் நேற்று (10 - 01 - 2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தனலக்சுமியின் அன்புக் கணவரும், Dr. பூலோகசுந்தரம், கமலாதாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், நாகலிங்கம் தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராமநாதன், பத்மநாதன், நாகநாதன், Dr. கயிலாயநாதன் (வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலை), Dr. திருமதி தவத்துரை (பொறளை வைத்தியசாலை), சண்முகநாதன் (தவம்), காலஞ்சென்ற குலசேகரம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பூலோகரஞ்சினி, மனோரஞ்சன் (யாழ். மாவட்ட சித்த மருத்துவ உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்), தனநாதன் (யாழ். பல்கலைக்கழகம், முகாமைத்துவம் 95 / Bad), ஆகியோரின் பாசமிகு தந்தையும், சேதிலிங்கம், செல்வராணி (யாழ். மாவட்ட சித்த மருத்துவ உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11 - 01 - 2001) வியாழன் பிற்பகல் 2.00 மணி அளவில் ஆழ்வான் கிணற்றடி பன்னாலை தெல்லிப்பழையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி கேணிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**து. சேதிலிங்கம்**
(மருமகன்)

பன்னாலை,
தெல்லிப்பழை.

(82820)

### இராமுப்பிள்ளை வாமதேவன்

(காரைநகர்)

(இளைப்பாறிய பிரதம லிகிதர், துறைமுக கூட்டுத்தாபன கணக்குப் பகுதி)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை வாமதேவன் 09-01-2001 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை-விசாலாட்சி தம்பதிகளின் புத்திரனும், மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும் நவரத்தினராசா (ரெலிகொம், ஹவ்லக் டவுன், கொழும்பு), குமாரதேவன் (திருகோணமலை), பத்மினி, வசந்தி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவசுப்பிரமணியம் (சிவா பிறதர்ஸ், திருநெல்வேலி), சுகந்தினி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், பாரதி, திவ்யா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமநாதன், சிவபாக்கியம் (கோதை) மற்றும் இராசலட்சுமி, லோகநாயகி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகம்மா, காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், பாலசிங்கம் மற்றும் ஞானகலை, கங்காதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருகோணமலை இந்து மயானத்தில் நாளை (12-01-2001) வெள்ளிக்கிழமை பகல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

244/68, லிங்க நகர்,
திருகோணமலை.

பாடசாலை ஒழுங்கை,
மானிப்பாய்.

(82823)

# 10 தமிழ்க்கட்சிகளின் ஒன்றிணைவை கொச்சைப்படுத்தும் சில சக்திகள்

## ஆனந்தசங்கரி கூறுகின்றார்

கொழும்பு, ஜன. 11

தமிழ் மக்களுக்காக—அவர்களின்உரிமைகளுக்காக—நாங்கள் 10 தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதை சகிக்க முடியாத சில புல்லுருவிகள் நாம் புலிகளுக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறி எங்கள் ஒன்றிணைவை கொச்சைப் படுத்துகிறார்கள். எமது ஒன்றுபட்ட முயற்சியை ஓரங்கட்ட அச்சக்திகள் முயல்கின்றன.

இதனை மக்கள் இனங்கண்டு சம்பந்தப்பட்டவர்களை ஓரங்கட்ட வேண்டும்.

—இப்படித் தெரிவித்தார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி.

யாழ். மேயராக என். ரவிராஜ் பதவியேற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களைத்துன்பத்திலிருந்து மீட்டு அவர்கள் வாழ்வில் முடிந்த அளவுக்கு விமோசனம் அளிக்கவே பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றோம்.

இன்று யாழ்ப்பாணத்தை சிலர் குத்தகைக்கு எடுத்தது போன்று ஆயுதம் மூலம் ஆக்கிரமித்து வருகின்றனர். அரசின் 'ஏஜெண்டுகளா'கவும் அவர்கள் செயற்பட்டும் வருகின்றனர். அங்கு தமிழ் மக்கள் விலை பேசப்படுகின்றனர்.

பல்குழல் பீரங்கிகளால் யாழ். குடாநாடு சல்லடையிடப்படுகின்றது.

நாம்கோட்டைக்குள்இருக்கவில்லை மக்களிடம் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டு தீர்த்து வருகின்றோம் — என்றார்.

(உ-8)

## மயக்க முற்ற ஐந்து பேரில் ஒருவர் மரணம்

ஆலயக் கிணற்றை இறைப்பதற்காக உள்ளே இறங்கிய சமயம் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டிருந்த ஐவரில் ஒருவர் நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

பொலிகண்டி வீரபத்திரர் ஆலய மேற்குப் பகுதியில் மூடப்பட்டிருந்த கிணற்றில் சிறு வழி ஊடாக உள்ளே இறங்கி கிணற்றைத் துப்புரவு செய்து கொண்டிருந்த ஐவர் மயக்க மடைந்தனர்.

அந்த ஐவரில் இராசா வீரமோகன் (வயது 26) என்பவரே யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை அளித்த சமயம் மரணமானார்.

(முன்னர் வந்த செய்தி 6 ஆம் பக்கத்தில்)

(ஐ 3-15-109)

## வேம்பொடுகேணி மாணவருக்கு!

வேம்பொடுகேணி சி. சி. த.க. பாடசாலையில் கல்வி கற்றுத் தற்சமயம் வேறு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குச் சீருடை, பாடநூல் ஆகியன வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

வடமராட்சியில் புலோலியில் உள்ள பளை உதவி அரச அதிபர் பணிமனையில் நாளையும் —

வலிகாமத்தில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமையும் — இந்தப் பதிவு வேலைகள் இடம்பெறவுள்ளன.

(உ-3)

## மீனவர் மீது தாக்குதல்

காக்கைதீவில் இருந்து நேற்றுப் பிற்பகல் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் சிலர் படையினரின் தாக்குதலுக்கு உள்ளானதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-3-5-10)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 11

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## திருவாசக முற்றோதல்

கந்தர்மடம் குமாரசாமி வீதியில் உள்ள ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமத்தில் இன்று காலை திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

(3)

★ ★ ★

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

(ஐ-3)

## தென்னிலங்கை பிக்கு கூறுகிறார்:

# பயங்கரவாதத்துக்குப் பதில் யுத்தத்தின் மூலம் மட்டுமே!

## அரசமைப்புச் சீர்திருத்தம் மூலம் அல்ல!!

கொழும்பு, ஜன. 11

நாட்டில் தலை தூக்கியுள்ள பயங்கரவாதத்துக்கு யுத்தத்தின் மூலம் பதில் கொடுப்பதை விட்டு விட்டு அரசமைப்புச் சீர்திருத்தங்கள் மூலம் பதில் கொடுக்க முற்பட்டால் அரசு பாரதூரமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

இப்படிக் கூறியுள்ளார் தென்னிலங்கையில் அரசியல் செல்வாக்கு மிக்க பௌத்த பிக்கு கங்கொடவில சோமதேரர்.

தமிழர் பிரச்சினைக்கு அரசமைப்புச் சீர்திருத்தம் மூலம் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் கூறியமைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பயங்கரவாதத்துக்குத் தீர்வு காண்பதற்கு அரசு பின் நிற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாடு பாரிய அபாய நிலையை நோக்கி முன்னேறுகிறது.

கொழும்பு மத்திய வங்கிக்குக் குண்டு வைக்க முற்பட்டதாகக் கூறப்படும்—இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் முக்கிய சூத்திரதாரியாகக் கருதப்பட்டு இந்தியாவினால் தேடப்பட்டுவரும்—பிரபாகரனுடன் என்ன பேச்சு வேண்டிக்கிடக்கிறது?

இவ்வாறான நிலையில் அரசமைப்புச் சீர்திருத்தம் மூலமான தீர்வை எட்டும் போது தமிழர்களுக்குக் குறிப்பிடத்தக்க அதிகாரம் வழங்கப்படும். அப்போது முஸ்லிம்கள் தமது உரிமைகளைக் கோரிப் போராட்டம் நடத்துவர்.

இரண்டு தரப்புக்கும் இடையில் சிக்கி இந்த யுத்தத்தைத் தீர்க்க அரசால் ஒரு போதும் முடியாது.

தமிழ் நாட்டுக்கு அச்சுறுத்தலாக உள்ள பிரபாகரனின் பயங்கரவாதத்தை ஒழிக்க அரசு இந்திய அரசுடன் கைகோர்த்துச் செயற்பட வேண்டும்.

—என்று அவர் மேலும் கூறினார்.

(உ-8)


## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பதவி

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவர்கள் சுயவிவரத்துடன் 18-01-2001 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். எழுத்துப் பரீட்சை 21-01-2001 இல் நடைபெறும்.

கல்விப் பணிப்பாளர்,
புலோலி.

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்கள

## வழங்குநர்களைப் பதிவு செய்தல்

வடமராட்சி வலயக் கல்வி நிர்வாகத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு தரமான கல்வி உள்ளீட்டுப் பொருள்கள்/சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தலுக்கான முடிவு திகதி 31 - 01 - 2001. தங்கள் பதிவு எண், பொருள்கள் முதலியவற்றை கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி பதிவுகளை மேற்கொள்ளலாம்.

வலயக் கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி, புலோலி.

விளம்பர அன்பளிப்பு:-

**நாவலர் புத்தகசாலை,**
சிலையடி, மந்திகை, புலோலி.

(சி/14766)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரி இடிந்து கற்குவியலாகக் காட்சி!

## அங்கு சென்று திரும்பிய அதிபர் தகவல்

தென்மராட்சி,ஜன.11

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக் கட்டடங்கள் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளன. கட்டடங்களைப் புதிதாக அமைத்தால் மட்டுமே கல்லூரி மீள அங்கு இயங்கக் கூடிய நிலை உள்ளது.

நேற்றுமுன்தினம் அங்கு ஆவணங்களை மீட்கச் சென்று திரும்பிய கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அலுவலக கட்டட இடிபாடுகளுக்கு மத்தியில் மாணவிகளின் பரீட்சைப் பெறுபேறு அட்டவணைகள் மட்டும் நனைந்து மிகவும் பழுதடைந்த நிலையில் மீட்டுவரப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கல்லூரியின் வகுப்பறைகள், ஆய்வுகூடம், நூல்நிலைய மண்டபம் உட்பட கல்லூரி கட்டட மொன்றில் இயங்கிய வலய கணிதவள நிலையம் ஆகியவை கற்குவியல்களாக காணப்படுகின்றன. கல்லூரி மதில்களும் இடிந்து காணப்படுகின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட தளபாடங்கள் கல்லூரியில் இருந்தன. அவற்றில் சுமார் ஐம்பது தளபாடங்கள் மட்டும் சேதமடையாத நிலையில் மீட்டுவரப்பட்டன.

கல்லூரி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த கணனிகள், ஜெனரேற்றர், தட்டச்சு, ரோணியோ இயந்திரங்கள் என்பன அங்கு காணப்படவில்லை.

கல்லூரியின் சுற்றாடல் பகுதியில் இருந்த அனைத்து வீடுகளும் சேதமடைந்து காணப்படுகின்றன. பெருங்குளம், கல்வயல் பகுதிகளைப் பார்க்கக்கூடியதாக உள்ளது. இப்பகுதியில் மரங்கள் எவற்றையும் பச்சையாகக் காணமுடியவில்லை. பெருங்குளம் பிள்ளையார் கோயில் தேர் முட்டி உள்ளது. ஆலயத்திற்கு முன்னால் உள்ள வயல்களிலும் காணிகளிலும் சேலைகளால் மறைப்புகள் அமைக்கப்பட்டிருப்பது தெரிகிறது. கல்லூரி சந்தியிலிருந்து பெருங்குளம் சந்திவரை உள்ள வீடுகள், கடைகள், மில் ஆகிய அனைத்துக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன - என்றும் அதிபர் தெரிவித்தார்.

உயர் கல்வியினைப் பெற உள்ள மாணவிகளுக்கு வழங்கப்படும் பரீட்சைகளின் பெறுபேற்றுச் சான்றிதழ் அட்டவணைகள் பழுதடைந்து காணப்படுவதால் அவற்றினை வழங்கமுடியாதுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-117)

# பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு விளக்கினார்.

அந்த நடவடிக்கைகளின் பெறுபேறுகள், புள்ளி விவரங்கள் என்பன இராணுவ நடவடிக்கை பற்றிய திரைப்படக் காட்சியுடன் விளக்கப்பட்டன.

செய்தியாளர்கள் கேள்வி நேரத்தின்போது பி.பி.ஸி. செய்தியாளர் பல கலைக்கழக எழுச்சி நிகழ்வு குறித்து வினா எழுப்பினார்.

"இன்னும் ஒருவார காலத்தில் யாழ்பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாட்டில் எழுச்சி செயற்பாடு ஒன்று நடைபெறவிருப்பதாக அறிகின்றோம். தமிழ் மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே என்று எடுத்துக் காட்டுவதற்கான அமைதி நிகழ்ச்சி ஒன்றை அவர்கள் ஏற்பாடு செய்கின்றார்கள். அதற்கு அனுமதி வழங்குவீர்களா?" என்று அந்தப் பெண் செய்தியாளர் கேட்டார்.

அதற்கு வடபகுதி இராணுவத் தளபதி பதிலளித்தார்.

"அனைத்துத் தமிழர்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் பணி அவர்களுடையதன்று அதற்கு வேறு அமைப்புகள், கட்சிகள் உள்ளன. அவர்கள் - மாணவர்கள் - வேண்டுமானால் தங்களுடைய விவகாரத்தைப் பார்க்கட்டும்.

"நிச்சயமாக இந்த ஏற்பாடுகளின் பின்னணியில் விடுதலைப் புலிகளின் தூண்டுதல் சக்தி இருக்கின்றது என்பது எமக்குத் தெரியும்.

"இப்போதுதான் குடாநாட்டில் அமைதி நிலவுகின்றது. அதைக் குழப்ப யாரும் முயலக்கூடாது. தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது.

"அவசரகாலச் சட்டத்தின் கீழ் இங்கு கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கு கட்டுப்பாடுகள் உள்ளன. விசேட விதிகள் உள்ளன. எனவே கண்டபடி யாரும் கூட்டம், ஊர்வலம், ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியாது.

"தற்போதைய அமைதிச் சூழலைக் கலைக்க - குழப்ப - முயலும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் அனுமதிக்கமாட்டோம்.

"இவ்வாறான கூட்டங்களில் இலகுவாக ஒரு கிரனேட்டை எறிவதன் மூலம் யாரும் குழப்பத்தை ஏற்படுத்தி விட முடியாது. அத்தகைய குழப்பங்கள் பொதுமக்களையும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் படையினர் மற்றும் பொலீஸாரையுமே பாதிக்கும்.

"விடுதலைப் புலிகள் அத்தகைய குழப்பத்தை ஏற்படுத்த விரும்புகின்றார்கள். எனவே புலிகளின் பின்னணியில் ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழவுக்குஅனுமதிவழங்கப்படமாட்டாது.-"

என்று பதிலளித்தார் மேஜர் ஜெனரல் விஜேந்திரா.

இராணுவ நடவடிக்கைகள் குறித்து வடபகுதித் தளபதி கூறியதாவது:-

செப்டெம்பர் மாதத்துக்குப் பின் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ்ப்பாணத்தில் புலிகளால் ஏற்படவிருந்த ஆபத்தை முற்றாக முறியடித்துவிட்டோம்.

அரியாலைக்கு கிழக்கே சாவகச்சேரி, தெற்கே சங்குப்பிட்டி வரையான பகுதிகளிலிருந்து விடுதலைப் புலிகளை முற்றாக விரட்டி அடித்து விட்டோம்.

இந்த நடவடிக்கைகளில் புலிகளுக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது.

இப்போது தரையில் பளை, நாகர் கோயில் பகுதிகளில்தான் புலிகளுடன் மோதும் நிலை இங்குள்ளது.

யாழ்நகர் மீதான ஆபத்து முற்றாக நீங்கியதால் இங்கு அமைதி நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்நகரைக் கைப்பற்றும் விளிம்பு நிலைக்கு வந்த புலிகள் அந்நிலையிலிருந்து பலத்த இழப்புகளுடன் துரத்தியடிக்கப்பட்டதால் -

படுதோல்விகள், பேரிழப்புகள் காரணமாக -

படுகாயமடைந்த தமது உறுப்பினர்களுக்குச் சிகிச்சை அளிக்கமுடியாத சிக்கல்களால் -

படையினரின் சுடுவல்லமைக்கு (**Fire Power**) ஈடுகொடுக்க முடியாமல் -

காலத்தை இழுத்து மீண்டும் ஒன்றுகூடி, தம்மை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் -

இப்போது யுத்தநிறுத்தம் குறித்து அறிவிக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தை சுற்றி வளைத்து, தமது கை ஓங்கியிருந்த ஜூன், ஜூலை மாதங்களில் இந்த அறிவிப்பை புலிகள் விடுத்திருக்கலாமே? இப்போது அறிவிப்பதற்கு அவர்களுக்கு யுத்தத்தில் ஏற்பட்டுள்ள பின்னடைவைத் தவிர வேறு காரணங்கள் இல்லை.

கைதடி, நாவற்குழி பாலங்களை விடுதலைப் புலிகள் முற்றாக தகர்த்துள்ளனர் - எமது முன்னேற்றத்தை தவிர்ப்பதற்காக புலிகள் எடுத்த நடவடிக்கை அது. என்றாலும் கடந்த 30 ஆம் திகதிக்கு பின் - 10 நாள்களுக்குள் - அந்தப் பாலப் பகுதியில் மண் நிரவி அதன் ஊடான போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம்.

நாளை (வியாழக்கிழமை) உங்களை (செய்தியாளர்களை), அந்தப் பாதை ஊடாக தென்மராட்சியில் மீளக்கைப்பற்றிய இடங்களுக்குக் கூட்டிச் சென்று காட்டுவோம் - இப்படி செய்தியாளர்களிடம் அவர் கூறினார். (உ)



கடந்த செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதிக்குப் பின்னர் அரியாலை, நாவற்குழி, கைதடி, நுணாவில், சாவகச்சேரி மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் கினிகிர மற்றும் ரிவிகிரண நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்து இராணுவத் தரப்பினால் நேற்று பலாலி இராணுவ தளத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த ஆயுத தளபாடங்களில் ஒரு பகுதி.


## யாழ்ப்பாணம் மாநகரசபை

## இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2001

கீழ்க்காணப்படும் இறைச்சிக்கடைகளை 20.01.2001 தொடக்கம் 31.12.2001 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்படிவக் கட்டணம் ரூபா 250.00உம், கீழ்க்காணப்படும் கேள்விப் பிணைப்பணமும் செலுத்துவதன் பேரில் கேள்விப்படிவங்களை எதிர்வரும் 18.01.2001ஆந் திகதி பி.ப 3.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய திகதி 18.01.2001 பி.ப. 3.30 மணி வரையாகும்.

உடனடியாகவே கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும். கேள்வியில் சித்தி பெறுபவர்கள் அதன் பகுதிப்பணத்தைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**விவரங்கள்**

| குத்தகை விவரம் | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 01. குருநகர் மாட்டிறைச்சிக்கடை | 6 | 2500 /- | 40000 /- |
| 02. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | 7 | 2500 /- | 6000 /- |
| 03. நரிக்குண்டு மாட்டிறைச்சிக்கடை | 1 | 5000 /- | 75000 /- |
| 04. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | 1 | 2500 /- | 22000 /- |
| 05. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 4 | 1500 /- | 5000 /- |
| 06. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 6 | 1500 /- | 5000 /- |
| 07. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | 7 | 1500 /- | 5000 /- |
| 08. நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | 8 | 1500 /- | 3500 /- |

*குறிப்பு:* ஏற்கனவே தவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்கள் கேள்விப்படிவம் பெற அருகதையற்றவர்களாவர்.

**வே.பொ.பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர்
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

*மாநகர சபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2001.01.10*

(சி-14756)


## மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டபின்

# கொழும்புத்துறை மேற்கில் வீடுகளில் பொருள்கள் திருட்டு

கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் வீடுகளில் இருந்து பொருள்கள் அபகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம் இந்தப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டதை அடுத்தே வீடுகளில் இருந்து பொருள்கள் களவு போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீடு பார்க்கச் செல்லும் சாக்கில் திருடர்கள் வீடுகளின் கூரைச் சீற்றுகள், ஓடுகள், தளபாடங்களை அபகரித்துச் செல்வதாக மக்கள் முறையிட்டுள்ளனர்.

ஈச்சமோட்டை 'டோபி' குளத்துக்கு அருகில் முகாம் அமைத்திருந்த படையினர் அங்கிருந்து வெளியேறி உள்ளனர். தற்போது ஈச்சமோட்டை ஊடாக கொழும்புத்துறைப் பகுதிகளுக்கு சென்று வர முடிகிறது.

இந்நிலையில் பட்டப்பகலில் வீடுகளில் இருந்து பொருள்களை அபகரிப்பதில் சில குழுக்கள் ஈடுபட்டு வருவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-17)


## போட்டிகள் ஒத்திவைப்பு

**சக்தி F.M. அனுசரணையுடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இடைநிலை விஞ்ஞானக் கழகம் நடத்தும் விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டிகள் அனேக பாடசாலைகளின் வேண்டுகோளுக்கமைய ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. புதிய திகதி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும்.**

இடை நிலை விஞ்ஞானக்கழகம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(C/14764)

## விலைவாசி உயர்வை ஆட்சேபித்து
# ஐ.தே.க., ஜே.வி.பி. உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜன.11

அத்தியாவசிய பொருள்கள் விலையேற்றத்தைக் கண்டித்து ஜே.வி.பியின் பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுக் காலை பத்து மணிக்கு நாடாளுமன்றம் கூடியதும் சுலோக அட்டைகளையும், பதாகைகளையும் ஏந்தியபடி அங்கு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொண்டனர்.

ஆனால்,அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களோ கூக்குரல் இட்டு ஆர்ப்பாட்டத்தைக் கேலி செய்தனர்.

இதனால் சபையில் அமளி துமளி ஏற்பட்டது. அதை அடுத்து சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க சபையை ஒத்திவைத்தார்.

மீண்டும் சபை கூடியபோது பாரிஸ மாநாட்டில் வழங்கப்பட்ட நிதி,அங்கு தெரிவிக்கப்பட்ட விடயங்கள், ஜனாதிபதியின் விஜயம் ஆகியன தொடர்பான விவரமான அறிக்கை ஒன்றைச சமர்ப்பித்து அரசமைப்பு விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உரையாற்றினார்.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பான தமது பதிலை நாளை அறிவிப்பதாக சபாநாயகர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் இன்று இடம்பெறவுள்ளது. (உ-3)

# வவுனியாவில் யாழ். மாணவன் முகமூடிக் குழுவால் கடத்தல்

வவுனியா,ஜன.11

ஓட்டோ ஒன்றில் வந்த முகமூடி அணிந்த ஆயுததாரிகள், வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவனான- இணுவிலைச் சேர்ந்த - சோமசுந்தரம் முகுந்தன் என்பவரை அவர் தங்கியிருந்த வீட்டில் இருந்து கடத்திச் சென்ற பரபரப்பான சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

பண்டாரிக்குளம் பகுதியில் வாடகைக்கு வீடு ஒன்றில் தங்கியிருந்து கல்வி பயின்று வந்த பிரஸ்தாப மாணவனைக் கடத்தியவர்கள் யார் என்பது குறித்துத் தகவல் ஏதும் நேற்றிரவு வரை வெளியாகவில்லை.

அதே சமயம் - பிரஸ்தாப மாணவனைக் கண்டுபிடிக்க உதவுமாறு கோரி வவுனியா செயலகம் முன்பாக வவுனியா கல்வியியல் கல்லூரி மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். (உ-3-8-164)


BRIGHTMAN
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக )
பிறவுண் வீதி -யாழ் நகர்
A/L 2003
BASIC CHEMISTRY
BY:- அன்பு
ஆரம்பம்:-நாளை(12/01/2001)
FRI - 6.30 a.m.
(MON,FRI-6.30)
(82774)


## அதிபர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ்.மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டுக்குரிய கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பது பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது என்றும்-

இதில் சகல பாடசாலைகளின் அதிபர்களையும் கலந்துகொள்ளும்படியும் - அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக கல்லூரி மாணவர் மன்றம் அறிவித்துள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு பகல் நேர மற்றும் பகுதிநேர மாணவர்களையும் 2001 ஆம் ஆண்டு அனுமதிக்கு நேர்முகப்பரீட்சைக்குச் சமுகமளித்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி மாணவர் மன்றம் கேட்டுள்ளது. (ஐ-3)

## எழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவையும் தரவேண்டும் என்று இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

பல்கலைக்கழக ஆசிரியர் சமூகம் இந்த எழுச்சி நிகழ்வுக்கு தனது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் பல்கலைக்கழக சமூகத்தினருக்கு வழங்கும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்க தலைவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக சமூகத்தினரது இந்தப் பிரசார முயற்சிகளுக்கு சமாதானத்தை விரும்பாத சக்திகள் இடையூறு விளைவிப்பது குறித்து மதகுருமார்கள் உட்பட இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட அனைத்து பிரதிநிதிகளும் தமது கவலையை வெளியிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் 'பொங்கு தமிழ்' நிகழ்ச்சியை நடத்துவதற்கு வேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு பொறுப்புகளும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. (உ-6)


ஆரம்பம் !
A/L - 2001
கம்பனி முடிவுக்கணக்கு
மாலை 4 மணி
A/L - 2002
நிறைவில் பதிவு
மாலை 3மணி
ஜனவரி -13
பிரத்தியேக வகுப்பு
(76/2, கோயில் வீதி, யாழ்.)
(C/14698)



தவிப்பாட அனுமதி வழங்கப்படுமா?
ஆம்!
A/L 2003
கணக்கீடு


SAT,SUN→10-11a.m.
ஆரம்:13.01.01→ SAT.
விக்னா
கல்வி நிறுவனம்
(82780)



புதிய வீடியோ போலம்பங்கள் விற்பனைக்கு
மூர்த்தி வீடியோ,
மானிப்பாய். (C/14769)



ஆங்கில வீடியோ CD வெளியீடு
- THE EVIL CULT-Jetli
- THE JACKAL- BruceWillis
- BATTLEFIELDEARTH- John travolta
- RAVEN HAWK- Rachel mclish
- CYBERCITY - Thomas Howell
- DIE HARD -2 - William Sadler

பிரதிகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்
ஆர்க் வீடியோ லைபிரரி
அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/14763)


# தமிழ்க் கட்சிகள் நேற்று பிரிட்டிஷ் தூதருடன் பேச்சு

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்புக்குப் பதிலாக அரசாங்கம் யுத்த நிறுத்தத்தை அறிவிக்காதது கவலையளிக்கிறது என்று பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா பீல்ட் அம்மையார் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் பத்துத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இப்படிக் கூறினார்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு, சமாதானப் பேச்சு ஆகியவை தொடர்பாக அரசதரப்பில் மாறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்படுவதையிட்டு தாம் கவலை அடைவதாகவும் அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இலங்கை அரசுக்குப் பிரிட்டன் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அவரிடம் கோரிக்கை விடுத்தனர். (உ-3-6)

## சந்திரிகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கும் பொருட்டு பிரதமர் வாஜ்பாய் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை இந்தியாவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தியா செல்லவுள்ள அமைச்சர் குழுவில் எஸ்.பி.திஸநாயக்க, ஜீ.எல்.பீரிஸ், மங்கள சமரவீர மற்றும் சில உயரதிகாரிகள் அடங்குவர் என்றும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது. (உ-8)

## பிரபாகரனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகலில் அவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேச ஏற்பாடாகியிருந்தது.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் அவர் சந்திக்க இருந்தபோதிலும் நேற்று இரவு ஏழு மணி வரை இச்சந்திப்புக்கள் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசும் விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்கு முன்னோடியாக மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்றைச் செய்வதற்கான முன் மொழிவுகளுடன் பூர்வாங்க சமரசத் திட்டம் ஒன்றை சொல்ஹெய்ம் கொண்டு வந்திருக்கிறார் என்றும் -

அதற்கு அரசுத் தரப்பின் அங்கீகாரம் கிடைத்தால் அத்திட்டத்துக்கு புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின அங்கீகாரத்தை பெறுவதற்காக சொல்ஹெய்ம் இன்று அல்லது நாளை வன்னி செல்வார் என்றும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## சிப்பாய் பலி

நாகர்கோயில் முன்னரங்க நிலைகள் மீது கடந்த இரு தினங்களாக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் மற்றுமொரு சிப்பாய் காயமடைந்தார் என்றும் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (உ-3)

## சிப்பாயின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரின் மரணம் தொடர்பான மரணவிசாரணை சாவகச்சேரி நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் இடம்பெற்றது.

அங்கு யாழ்.வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சி.வே.ஸ்ரீராஜேஸ்வரன் சாட்சியமளித்தார்.

பிரஸ்தாப நபரின் சடலத்தை யாழ்ப்பாணத்தில் பரிசோதனை செய்து பூரணமான முடிவைப் பெற்றுக் கொள்ள முடியாதென அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியைப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள சிப்பாயை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி பணித்தார்.

கொடிகாமத்தில் இரண்டு பொலீஸாருக்கு இடையில் ஏற்பட்ட தகராறினால் ஒருவர் மற்றையவரைப் பிடித்து கிணற்றில் தள்ளியதாகவும்-

கிணற்றில் வீழ்ந்த அந்தக் கான்ஸ்டபிள் உயிரிழந்ததாகவும் - நேற்று உதயனில் செய்தி வெளியாகி இருந்தது.

ஆனால் வாய்க்கால் வெள்ளத்திலிருந்தே சடலம் மீட்கப்பட்டதாகவும் -

மரணத்துக்கான காரணம் ஏதும் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் - தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-3-117)


TRRO CTC
Computer Training Center

புதிய பிரிவுகள் ஆரம்பம்
- Dip. in Information Technology
- Dip. in Computer Programming
- Dip. in Microsoft Office 2000
- Dip. in Microsoft Works 2000
- Dip. in Desktop Publishing
- Internet E-mail Communication
- Computer Driving License
- Certificate In Computer Hardware
- Certificate Courses
- Special Course for School Students
- Individual Class

வசதிகள்:-
- நவீன கணனி தொழில்நுட்பம்
- மட்டுப்படுத்தப்பட்ட கணனி நேரம்
- கணனியைத் தங்கள் துறையாகக் கொண்ட அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள்
- வீடியோ படக்காட்சிகளுடனான விரிவுரைகள்
- learning CD களை உள்ளடக்கிய நூலக வசதி
- தமிழ்மொழி மூல விளக்கவுரைகள்
- மாதாந்த கட்டண வசதிகள்

இப்பிரிவில் யாழ்.நிலையத்தில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு கட்டணத்தில்
25% கழிவு வழங்கப்படும்
ஆரம்பம்: 15.01.2001

விபரங்களுக்கு :-
Director,
TRRO Computer Training Center,
4th Cross Street, Jaffna.

கிளை
K.K.S. Road,
Maruthanarmadam Junction,
Opp. Ramanathan College.
(C/14721)


# மரண அறிவித்தல்கள்

## பரதாசன் கனேஸ்வரதாசன்

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த பரதாசன் கனேஸ்வரதாசன் 09-01-2001 செவ்வாய்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

இவர் பரதாசன் - பத்தினிதேவி தம்பதிகளின் அருமை மகனும் மகேந்திரதாசன்(இத்தாலி), ரவீந்திரதாசன்(யாழ்.மாநகரசபை),மகேஸ்வரதாசன், கௌரி, ஈஸ்வரதாசன்(யாழ்.மாநகரசபை), நடேஸ்வரதாசன் (கனடா), விஷ்ணுதாசன்(கனடா), சர்வேஸ்வரதாசன், உதயகுமாரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(10-01-2001) புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***310,Galle Road,***
***Wellawatta.***
T.P 075 - 514675

தகவல்:-
பரதாசன் (தகப்பன்)
(C/14767)

## திருமதி செல்லம்மா இராசையா

சறோயினி வாசம், கண்டி வீதி, சாவகச்சேரியைப்பிறப்பிடமாகவும் பிரட்றிக்கா வீதி, வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திரு. திருமதி வீரசிங்கம் அவர்களின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற இராசையா(சறோஜா தங்கமாளிகை உரிமையாளர்) அவர்களின் அருமை மனைவியுமான செல்லம்மா அவர்கள் 10-01-2001 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராசதுரை, சறோசா ஆகியோரின் அருமைத்தாயாரும் காளிராசா தனலட்சுமி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், இராசதுரை, சிவக்கொழுந்து மற்றும் இராசம்மா, நடராஜா, ஆகியோரின் சகோதரியும் சுபாஸ்சந்திரபோஸ், ஜெயந்தி (ஜேர்மனி), காலஞ்சென்ற ராஜேந்திரபோஸ், மணிமாலா, ராஷ்கண்ணா(ஜேர்மனி), தனதாஸ், **Dr.**இந்திராகாந்தி **(S.H.W** - Borela), Dr.ருபகாந்தி, பிரபாகரன்(ஆஸ்திரேலியா) **Eng.** ஸ்ரீகாந்தி,ரஞ்சித்(சிங்கப்பூர்), சிவகாந்தி (மிருகவைத்திய பீடம், பெரதனியா) ஆகியோரின் பேர்த்தியும் சஞ்ஜீத், அபிஷேக் (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (11-01-2001) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டு பின்னர் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**NO.256,WOLFENDHAL STREET,**
**G 2/3 NEW FLAT,**
**COLOMBO** - 13

தகவல்:-
இ.இராசதுரை (மகன்)
(075-331064)
கா.சறோசா (மகள்)
(074-516510)
(C/14768)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.